ISSN 1391-9504

# Vijey விஜய் விஜய்

07.04.2010 - மலர் 07, இதழ் 05



## இலங்கை நாடாளுமன்றத்தின் உள்ளக அமைப்பு முறை

## உலகின் உயரமான கட்டடங்கள்

## டைனோஸர்களின் பிரமாண்டத்தின் ரகசியம்

## சீனப் பெருஞ்சுவரின் யுத்த தந்திரக் கணவாய்கள்

விலை ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கறுவா உரிமைக்காக ஏற்பட்ட கலவரம்

ஒல்லாந்த வர்த்தக சங்கத்தால் நீர்கொழும்பில் உரிக்கப்படும் கறுவாவை நிலமேக்கள் அரசுடைமையாக்கினர். அப்பிரதேசத்தில் கறுவா உரிப்பது தண்டனைக்குரிய குற்றம் என்றும் ஒல்லாந்தருக்குக் கறுவா தேவையாயின் ஒரு தொகை கறுவாவை அனுப்ப மன்னன் விருப்பம் கொண்டுள்ளார் என்றும் மன்னனால் ஆள்பதி பில்லுக்கு செய்தி ஓலை ஒன்று அனுப்பப்பட்டது. ஒல்லாந்தர்கள் அதனை ஏற்றுக்கொண்டனர். நிலமேக்களோ அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். எனினும், இரண்டாம் இராஜசிங்க மன்னன் அதனைப் பொருட்படுத்தவில்லை. ஒல்லாந்தருக்கு தொடர்ந்து கறுவாவை அனுப்பினான். அதனால், அவர்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

கண்டி நிலமேக்களுக்கு ஒல்லாந்தருடன் தூதுவர் தொடர்பொன்றை ஏற்படுத்தி நட்பைத் தொடர விரும்பினர். ஒல்லாந்தரும் அதனை ஏற்றுக்கொண்டனர். அதன்பின் கறுவா உரிப்பதற்கு நிலமேக்கள் இடமளித்தனர்.

இன்னொரு விதத்தில் நிலமேக்கள் கறுவா வர்த்தகம் தொடர்பில் ஒல்லாந்த வர்த்தக சங்கத்திற்கு எவ்வித உரிமையும் இல்லை என்பதைக் காட்ட முனைந்தனர். நாட்டின் முழு நிலப்பகுதியும் மன்னனுக்கே சொந்தம் எனக் கூறினர். நிலத்தை மீண்டும் பெறுவதே அவர்களின் நோக்கமாக இருந்தது.

கி.பி 1684 ஆம் ஆண்டு நிலமேக்கள் எவ்வித கலவரமும் இன்றி மாத்தறை மற்றும் சப்ரகமுவ எல்லை என்பனவற்றைக் கைப்பற்றினர். பின்னர் அவர்கள் ஆள்பதியை சந்திக்கச் சென்றனர். அங்கு ஆள்பதி அவர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்றார். நிலமேக்கள் மன்னன் சுகமாக இருப்பதாக தகவல் தெரிவித்தனர். சுமுகமான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். ஆள்பதியின் சுகத்தைப் பற்றியும் விசாரித்தனர். இரண்டாம் இராஜசிங்க மன்னன் வயோதிப பருவத்தை அடைய அடைய நிலமேக்களின் அதிகாரமும் ஓங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீர மாணவர்கள் தங்கம், வெள்ளி விருதுகளை வென்றனர்




வீர பொது மக்கள் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேசிய வீர மாணவர் விருது விழா அண்மையில் கல்வி அமைச்சில் நடைபெற்றது. இதன் போது, வீர மாணவ தங்கத் தாரகை மற்றும் வீர மாணவ வெள்ளித்தாரகை விருதுகளை முறையே யாழ்ப்பாணம் மற்றும் மாத்தளை மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் இருவர் பெற்றுக் கொண்டனர்.

2009 ஏப்ரல் மாதத்தில் வடக்கில் நடைபெற்ற யுத்தத்தின்போது காயமடைந்த குழந்தையொன்றினதும் வயோதிப பெண்மணியொருவரினதும் மற்றுமொருவரினதும் உயிரைக் காப்பாற்றியமைக்காக யாழ்.மானிப்பாய் மகளிர் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் சின்னராசா தனன்சிகா என்ற மாணவி தனது வீரச் செயலுக்காக தங்கப்பதக்கம் வழங்கி கௌரவிக் கப்பட்டார்.

மேலும், 2009 மார்ச் மாதத்தில் ஒருநாள் யானைக் கூட்டமொன்றின் தாக்குதலுக்கு இலக்காகியிருந்த தனது சகாக்களைக் காப்பாற்றியமைக்காக மாத்தளை வெஹரகல கனிஷ்ட வித்தியாலயத்தில் கல்வி கற்கும் ஐ.வீ.சமன்குமார என்ற மாணவன் வெள்ளிப்பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். கல்வி அமைச்சின் செயலாளர் நிமல் பண்டார அவர்களினால் இருவரும் பதக்கங்கள் அணிவித்து கௌரவிக்கப்படுவதையும், மாணவர்கள் இருவரும் சுமுகமான கலந்துரையாடலில் ஈடுபட்டுக்கொண்டிருப்பதையும் படங்களில் காணலாம்.

விஜய்
Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

# உணவுக்குப் பின் குளிர் நீர் வேண்டாம்!

உணவருந்திய பின் குளிர் நீர் அருந்துவோரின் எண்ணிக்கை தற்காலத்தில் அதிகரித்துள்ளது. இது மிகவும் ஆபத்தான செயல் என்று மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர்.

இதுகுறித்து, அவர்கள் விளக்கம் அளிக்கும்போது; ''உணவருந்தி முடித்தபின் குளிர் நீரை அருந்தினால் அது நாம் சாப்பிட்ட உணவில் உள்ள எண்ணெய்த் துகள்களை கெட்டியாக்கி விடுகிறது. இதனால், சாப்பிட்ட உணவு செரிமானம் அடைவதில் சிக்கல் ஏற்படுகின்றது. அதுமட்டுமன்றி, உடலில் இருக்கும் கொழுப்பின் அளவு அதிகரிக்கவும் அது காரணமாக அமைகின்றது. இந்த நிலை தொடர்ந்து நீடித்தால் இதயம், சிறுநீரகம் சம்பந்தப்பட்ட பல பிரச்சினைகள் ஏற்படலாம் என்று தெரிவித்துள்ளனர்.




இதனை நீங்களே ஆய்வு செய்து நிரூபித்துக் கொள்ளலாம் என்று அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். அதாவது, எண்ணெய்த் தன்மை கலந்த உணவொன்றை குளிர்சாதனப் பெட்டியில் வைத்துவிட்டு, சில மணி நேரம் கழித்து அதனை வெளியில் எடுத்துப் பாருங்கள். அந்த உணவுப் பதார்த்தத்தில் ஆங்காங்கே திண்மமாக வெள்ளை நிறத்தில் எண்ணெய் படிந்திருப்பதைக் காணலாம்.

இவ்வாறுதான் நம் உடலுக்குள் குளிர் நீர் சென்றாலும் நிகழ்கின்றது. குறித்த எண்ணெய்த் துகள்கள் இதுபோன்று மாறி காலப்போக்கில் சிக்கலை ஏற்படுத்தி விடுகின்றன.

# 26,000 மாணவர்கள் இன்றளவிலும் முகாம்களிலேயே கல்வி கற்கின்றனர்

சுமார் 26,000 மாணவர்கள் இன்றளவிலும் முகாம்களில் வசித்து வருவதோடு, அங்கு தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள பாடசாலைகளில் தமது கல்வி நடவடிக்கைகளை தொடர்ந்து வருவதாக வட மாகாண கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.



இடம்பெயர்ந்துள்ள மேற்படி மாணவர்களின் கற்றல் தேவைகளுக்காக சகல வசதிகளையும் தங்குதடையின்றி வழங்கி வருவதாகவும் அரசாங்க அதிகாரசபைகள், அதிபர், ஆசிரியர்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் நிதி (UNICEF) ஆகியவற்றிலிருந்து இதற்கான உதவிகள் பெற்றுக் கொள்ளப்படுவதாகவும் வட மாகாண கல்விச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு கிராமத்திலும் கல்வி நடவடிக்கைகளுக்கு வசதியாக வகுப்பறைகள் அமைக்கப்பட்டு வருவதோடு, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் வவுனியா வரை இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளை இங்கிருந்தவாறு தொடர்வதோடு, தமது முதலாம் தவணை பரீட்சைகளுக்கும் ஆயத்தமாகின்றனர் என்றும் தெரிவிக் கப்படுகின்றது. அத்துடன், க.பொ.த உ/தரப் பரீட்சைக்குத் தோற்ற இருக்கின்ற மாணவர்களுக்காக விசேட செயற்றிட்டங்களும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாடநூல் விநியோகம் மற்றும் ஏனைய தேவைகள் தொடர்பில் வட மாகாணத்திற்கு விசேட கவனம் செலுத்தியுள்ளதாகவும், ஒட்டுசுட்டான் மற்றும் வட்டப்பளை ஆகிய இடங்களில் மேலும் இரண்டு பாடசாலைகளை நிறுவ உத்தேசித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மீள் குடியேற்ற நடவடிக்கைகளுக்கமைய இதுவரை சுமார் 60,000 மாணவர்கள் மீள் குடியேற்றப்பட்டுள்ளனர் என்றும் அறியக்கிடைக் கின்றது.

# மரங்களில் இருந்தும் மின்சாரம்



வொஷிங்டன் பல்கலைக் கழக ஆய்வுக்குழுவின் அண்மைய ஆய்வொன்றினை அடுத்து, மரங்களில் இருந்து குறைந்த அளவில் மின்சாரம் தயாரிக்க முடியும் என்று தெரியவந்துள்ளது. அதன்படி, ஒரு மரத்தில் இருந்து 20 மில்லிவோல்ட்ஸ் மின்சாரம் எடுக்க முடியும். மில்லி வோல்ட்ஸ் என்பது 0.2 வோல்ட்ஸ் ஆகும்.

60 நாட்களில் ஆங்கிலத்தை கற்றுக் கொள்ளுங்கள்
இலகுவாக ஆங்கிலம் கற்க சிறந்த வழிகாட்டி
E.L.I யின் தபால் மூல ஆங்கில பாடநெறிகள்.
BASIC / SPOKEN ENGLISH & DIPLOMA IN ENGLISH
அடிப்படையில் இருந்தே தமிழ் விளக்கத்துடன் கற்றுக் கொடுக்கப்படும் தமிழ் எழுத.வாசிக்க தெரிந்து இருந்தால் போதுமானது. (வயது கட்டுப்பாடு தேவையில்லை)
60 நாட்கள் முடிவில் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழ் ஒன்று வழங்கப்படும்.
இலவச T.Shirt ஒன்றும் Phone Sim English Book என்பன இலவசம்
பாடநெறியில் இணையும் அனைவருக்கும் அழகிய T.SHIRT ஒன்று Phone Sim Card மற்றும் 30 Easy way English புத்தகம் ஒன்று இலவசமாக வழங்கப்படும்
மேலதிக விபரங்களுக்கு பெயர்.முகவரியை 0777-220002 க்கு SmS செய்யுங்கள்
இலவச Phone Sim
இலங்கையில் எப்பாகத்தில் இருந்தும் எம்முடன் இணைய முடியும்
மேலதிக விபரங்களுக்கு 20/- பெறுமதியான 2 முத்திரைகள் அனுப்பி பெறலாம்.
THE ENGLISH LANGUAGE INSTITUTE
P.O. BOX 83, KANDY. Tel: 081-561 5 561, 0777-220002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவறான பழக்கங்களா? இன்றே தவிர்ப்போம்!

நீங்கள் ஏதாவதொரு பழக்கத்தை நீண்டகாலமாக கையாண்டு வந்தால் 'அப்பழக்கத்திற்கு அடிமையாகிவிட்டார்' என உங்களை மற்றவர்கள் இனங்கண்டு கொள்வர். உங்களைப் பற்றி நீங்களே சற்று சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் அதிகம் விரும்பிப் பார்க்கும் 'கார்ட்டூன்' நிகழ்ச்சியை தொலைக்காட்சியில் பார்க்கும் சந்தர்ப்பம் ஏதாவதொரு காரணத்தால் இல்லாமல் போனால் ஏற்படும் நிலை என்ன என்பதை உணர்வீர்கள். இந்த ஏமாற்றம், மனஅழுத்தமாகவும் அமைதியற்ற மனநிலையையும் மகிழ்ச்சியற்ற தன்மையையும் ஏன் கோபத்தையும்கூட வரவழைக்கலாம். இந்த நிலையையே நாம் 'தவறான பழக்கங்களுக்கு அடிமையாதல்' என அழைக்கின்றோம். 'தீவிர துர்ப் பழக்கம்' என்றும் இதனைக் கூறுவர்.

பெரும்பாலும் தீவிர துர்ப்பழக்கத்தை ஒரு பழக்கமாகவே காணலாம். பழக்கம் என்பது ஏதாவதொரு உடல் அல்லது உள்ள செயற்பாட்டு மாதிரியாகும். எமது பொதுவான சுபாவம் அல்லது இயல்பு என்னவென்றால், எமது வசதிக்காக சில செயல்முறைகளை ஏற்படுத்திக்கொள்வதாகும். அந்த செயல்முறையை தொடர்ந்து மேற்கொண்டால் அதுவே துர்ப் பழக்கமாக மாறுகின்றது. இத்தகைய துர்ப்பழக்கமானது உள முரண்பாடு போல் மேலோட்டமாகத் தெரிந்தாலும் அதில் உடல் தேவைகளும் உள்ளடங்கியுள்ளன என்பதே உண்மையாகும். அதுமட்டுமல்ல சில தீய பழக்கங்கள் உயர்ந்தவை என்ற தவறான எண்ணத்தையும் அநாவசிய செலவினத்தையும் ஏற்படுத்தக்கூடியதாக அமைந்துவிடுகின்றன. உதாரணமாக, தாகத்திற்குத் தண்ணீர் குடிப்பதற்குப் பதிலாக குளிர்பானங்களை வாங்கி அருந்துவது, பிறந்த நாள் வைபவங்களுக்கு விசேட உணவு வகைகளைப் பரிமாறுவது என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

சில பிள்ளைகள் நூல்களை வாசிக்கும் பழக்கத்திற்கு அடிமையாகிறார்கள். சிலர் பாடப் புத்தகங்களைப் படிப்பதையே முழுநேரமும் கொண்டுள்ளனர். இத்தகைய பழக்கத்திற்கு அடிமையாவது நல்ல பழக்கவழக்கம் என நீங்கள் நினைக்கலாம். ஆனால், எந்தவொரு செயலுக்கும் நாம் அடிமையாவது உரிய பலனை அளிக்காது என்பதே உண்மை. இதன்படி, புத்தகங்கள், பத்திரிகைகள் போன்றவற்றை வாசிக்கும் பழக்கத்திற்கு சதா அடிமையாவதால் பிள்ளைகள் விளையாட்டில், கலைத்துறைகளில் அல்லது பாட இணைச் செயற்பாட்டில் பங்குபற்றவும் ஈடுபாட்டுடன் செயல்படவும் முடியாமல் போகலாம். இது அந்த மாணவனின் பல்தரப்பட்ட திறன்களை வெளிப்படுத்தும் வாய்ப்பை இழக்க நேரிடும். இதனால், எந்தவொரு பழக்கத்திற்கும் நாம் அடிமையாகக்கூடாது.





இனிப்பிற்கு அடிமையாவது ஆரோக்கியத்திற்கு கேடு விளைவிக்கும்

## காலையில் தேநீர், கோப்பி, பால் அருந்துவதை பழக்கப்படுத்திக்கொள்ளல்

சிலர் காலையில் வழக்கமாக குடிக்கும் தேநீரோ, கோப்பியோ, பாலோ வழக்கமான நேரத்திற்கு கிடைக்காவிட்டால் பல பிரச்சினைகளுக்கு உள்ளாவதாக உணர்கின்றனர். உடல் சக்தியற்று இருப்பது, நீண்டநேரம் தூக்கமயக்கத்தில் இருப்பது, மலம் கழிக்க சிரமப்படுவது போன்ற சிரமங்களை எதிர்கொள்கின்றனர். சிலர் காலையில் பால் தேனீர் குடிக்காமல் இருந்தால் முழு நாளும் பிரச்சினைகளை எதிர்நோக்குவதாக கூறுவார்கள்.

## சொக்லட் இனிப்பு வகைகளுக்கு அடிமையாதல்

பிள்ளைகளின் இந்த பழக்கவழக்கங்கள் அநாவசிய விளைவுகளையும் வீண் பணவிரயங்களையும் ஏற்படுத்துவதோடு, உடல் ஆரோக்கியத்திற்கும் பெரும் தீங்குகளை விளைவிப்பதாகவும் அமைகின்றது. முக்கியமாக இவற்றில் கலோரியின் அளவு அதிகமாக இருப்பதால் நீரிழிவு, கொலஸ்ட்ரோல் (கொழுப்பு) பாதிப்புகள் ஏற்படக்கூடும்.



கணினி விளையாட்டுக்கள் கல்வி முன்னேற்றத்தில் பாதிப்பை ஏற்படுத்தும்



செல்லிடத் தொலைபேசியை அவசிய தேவைகளுக்கு மாத்திரம் பயன்படுத்தவும்

## நொறுக்குத்தீன் பழக்கத்திற்கு அடிமையாதல்

பிரதான உணவு வேளைகளுக்கு மேலதிகமாக அடிக்கடி நொறுக்குத்தீன்களை உண்ணும் பழக்கம் நம்மில் பலரிடையே காணப்படுகின்றது.அத்தகைய பழக்கம் எதுவும் இல்லாத சிலர் குறைந்தபட்சம் சிறிது சீனியையாவது வாயில் போட்டுக் கொள்ளும் பழக்கத்தைக் கொண்டுள்ளனர்.

## நித்திரைப் பழக்கத்திற்கு அடிமையாதல்

பகல் வேளைகளில் நித்திரை கொள்வதில் பாடசாலை மாணவர்களில் பலர் கைதேர்ந்தவர்கள். வீண் சிரமங்களும், அன்றாட வேலைகளில் தாமதமும், பாடசாலையில் வழங்கும் வீட்டுப்பாடங்களை செய்யாமல் தவிர்ப்பதும் பாடசாலை கல்விச் செயற்பாட்டை பின்போடுவதும் காலத்தை வீணே கழிப்பதும் இத்தீய பழக்கத்தினால் ஏற்படும் விளைவுகளாகும்.



பகல் நேர நித்திரை தீங்கு விளைவிக்கும்

## சுவிங்கம் சாப்பிடுதல்

சில பிள்ளைகள் மற்றும் இளைஞர்கள் இப்பழக்கத்திற்கு பெருமளவு அடிமையாகி இருக்கின்றனர். இது உடல்நலத்திற்கு கேடு விளைவிக்கும் ஒரு பழக்கமாகும். இவற்றில் அடங்கியுள்ள செயற்கை சுவையூட்டிகள், வர்ணக்கலவை, சீனி என்பன ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிப்பதோடு வாயின் செயற்பாட்டிற்கும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இது ஏதோ ஓர் உணவை உட்கொள்வதாக மூளைக்கு தவறான சமிக்ஞையை வழங்கக் காரணமாக அமைகின்றது. இதனால், உணவு உட்கொள்ளப்படுகிறதா? இல்லையா? என மூளை அறிந்துகொள்வதில் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றது.

## தொலைக்காட்சிக்கு அடிமையாதல்


காலத்தை வீணாக்கும் தீய பழக்கங்களில் இது முக்கியமானது. உரிய முறையில் பயன்படுத்தாவிடின், பிள்ளைகளின் கல்வியை சீரழிக்கும் முக்கிய சாதனமாகவும் இது காணப்படுகின்றது. தொலைக்காட்சியில் ஒலி-ஒளிபரப்பாகும் நிகழ்ச்சிகள் பல பிள்ளைகளின் பிஞ்சு உள்ளங்களுக்கு ஒத்துவராத பொருந்தாத நிகழ்ச்சிகளாகவும் அவர்களிடையே வீணான தாக்கங்களையும் உளவியல் பாதிப்புகளையும் ஏற்படுத்தக் கூடியதாகவும் இருக்கின்றன. குறிப்பாக, திரைப்படங்கள், தொலைக்காட்சி நாடகங்கள் பலவற்றைக் குறிப்பிடலாம். ஆனால், முக்கிய பயனுள்ள கல்வி நிகழ்ச்சிகளையும் கல்விக்குத் தேவையான விடயங்களைத் தாங்கிய நிகழ்ச்சிகளையும் சமய நிகழ்ச்சிகளையும் அன்றாட செய்திகளையும் பார்ப்பது தவறல்ல.

## கணினி விளையாட்டுக்களும் செல்லிடத் தொலைபேசியும்

காலத்தையும் பணத்தையும் வீண் விரயமாக்கும் இவ்விரு பழக்கங்கள் உங்கள் கல்வி முன்னேற்றத்திலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே, கணினியை சரியான தேவைகளுக்கு சரியான முறையில் பயன்படுத்துவதும் செல்லிடத் தொலைபேசியை அவசிய தேவைகளுக்கு மாத்திரம் பயன்படுத்துவதும் முக்கியமானதாகும். குறிப்பாக தொலைபேசி எனும் அனாவசிய பழக்கத்திற்கு அடிமையாவதால் நேரம் மாத்திரமன்றி பணமும் வீண் விரயமாகின்றது.


(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சீனாவின் பெரிய சுவர்

**உலகின் மிகப்பெரிய நாடுகளில் ஒன்றாகவும் ஆசியாவின் பெரிய நாடுகளில் ஒன்றாகவும் மிளிர்வது மக்கள் சீனக் குடியரசு. உலகிலே மிக அதிகமான மக்கள் வாழும் நாடும் இதுவே. யாங்சி, ஹுவாங் ஹோ போன்ற நதிப் பள்ளத்தாக்குகளில் தோன்றி-வளர்ந்த சீன நாகரிகம், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது.**



சீனப்பெருஞ்சுவரின் அமைவு

## சீனப் பெருஞ்சுவர்

சீனாவின் பெருமைக்குரிய சின்னம்தான் சீனப்பெருஞ் சுவர். சந்திரனிலிருந்து பார்க்கக்கூடியதும் மனிதக்கரங்களால் எழுப்பப்பட்டதுமான ஒரே ஒரு கட்டட அமைப்பு சீனப் பெருஞ்சுவர் என்று கூறப்படுகின்றது. எகிப்தின் பிரமிட்டுக்கள், இந்தியாவின் தாஜ் மஹால், பெபிலோனியாவின் தொங்கு தோட்டம் போன்றவற்றோடு உலகின் ஏழு புராதன அதிசயங்களில் ஒன்றாக சீனப் பெருஞ்சுவரும் கொள்ளப்படுகின்றது.

சீனப் பெருஞ்சுவரானது வட சீனாவில் யான்சான், கின்சான் மலைத்தொடர்களின் கரைகளில் எழுந்து மேற்கில் கான்சு மாகாணத்தின் ஜியாயுகுவான் கணவாயினூடாக கிழக்கில் போகாய்க் குடாவின் கரையிலுள்ள ஷன்ஹாய்குவான் கணவாயில் முடிவடைகின்றது.

இச்சுவரின் நீளம் 6259.6 கிலோமீற்றராகும். இதன் பல்வேறு உள்ளடக்கங்கள், கிளைகளையும் சேர்த்து அது 8851.8 கிலோமீற்றர் நீளத்துக்கு விரிந்து செல்கின்றது. பெருஞ்சுவரின் அகலம் அடிப் பகுதியில் 20 அடியாகவும் உச்சிப் பகுதியில் 15 அடியாகவும் காணப்படுகின்றது. எவ்வித இயந்திர சாதனங்களுமற்ற காலப்பகுதியில், இச்சுவர் மனிதக்கரங்களாலேயே கட்டி முடிக்கப்பட்டுள்ளது. சீனாவின் சிறந்த பாதுகாப்பு அரணாகவே இப்பிரமாண்டமான மதில் அமைந்துள்ளது. சீனப் பெருஞ்சுவர் தற்போது ஒரு வரலாற்று நினைவுச் சின்னமாகப் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. உலகில் சுற்றுலாப் பயணிகள் அதிகம் செல்லும் இடங்களில் ஒன்றாக இது அமைந்துள்ளது.

## கட்டப்பட்டதன் பின்னணி

இன்றுவரை மிகப் பழைமையான சிற்பக் கலையின் சின்னமாக விளங்குவது சீனப் பெருஞ்சுவர். இச்சுவர் சீனாவுக்கும் மொங்கோலியாவுக்கு மிடையே சீனாவின் பாதுகாப்பிற்காக கி.மு 3 ஆம் நூற்றாண்டில் நிர்மாணிக்கப்படத் தொடங்கியது. சீனாவின் முதலாவது மன்னரான கின் ஷி ஹுவாங் என்பவரது காலத்திலேயே இப்பணிகள் ஆரம்பமாகின. அக்காலகட்டத்தில் கணிசமான பெரிய நகரங்கள் மத்திய சீன சமவெளிகள் பலவற்றில் அமைந்திருந்தன. கின்சான், யான்சான் மலைத்தொடர்களுக்கு வடக்கிலிருந்து மொங்கோலிய நாடோடி மக்கள் அடிக்கடி படையெடுத்து இந்நகரங்களைச் சூறையாடி வந்தனர். இந்நாடோடி மக்கள் குதிரை வீரர்களாகவும் அம்பு எய்வதில் அதி சாமர்த்தியம் பெற்றவர்களாகவும் இருந்தனர். தமது குதிரைகளில் அதிவேகமாக வந்து தாக்கிவிட்டு, கைகளில் அகப்பட்டவற்றைச் சூறையாடிச் செல்வது இவர்களின் வழக்கமாக இருந்தது. இதனால், சீன மக்கள் அதிகம் பாதிக்கப்பட்டனர்.

இப்படையெடுப்பையும் சூறையாடலையும் தடுப்பதற்காகவே யான், சான், வெய், சிங் ஆகிய சிறிய ராஜ்யங்கள் அமைந்திருந்த மலைமுகடுகளில் சுவர்களைக் கட்டியெழுப்பினர். பின்னர் இச்சிற்றரசுகளை ஒன்றாக்கி, மலைமுகடுகளில் எழுப்பியிருந்த மதில்களை தொடுத்து பாரிய மதிலை நிர்மாணிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது. மூன்று






லட்சம் துருப்புக்களும் விவசாயிகளும் இந்த வேலைக்கு ஈடுபடுத்தப்பட்டனர். தொடர்ந்து வந்த அரச வம்ச காலங்களில் இச்சுவர் பலப்படுத்தப்பட்டு, புனரமைக்கப்பட்டது. 14 ஆம் நூற்றாண்டு முதல் 17 ஆம் நூற்றாண்டு வரையான மிங் வம்ச காலத்தில் இச்சுவர் 18 தடவைகள் பெரிய அளவில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

## உள்ளடக்கங்கள்

சீனப் பெருஞ்சுவரில் 14 முக்கிய யுத்த தந்திரக் கணவாய்கள் உண்டு. இவற்றில், சுவரின் இரு கரைகளிலுமுள்ள சங்காய்குவான் கணவாயும் ஜியாயுகுவான் கணவாயும் முக்கியமானவை. அமைதியான போகாய்க் கடலுக்கு முன்னாலுள்ள சாங்காய்குவான் கணவாயானது யான்சான் மலைத்தொடரின் இரண்டு செங்குத்தான பாறைகளுக்கிடையில் அமைந்துள்ளது. வடசீனாவை வடகிழக்குச் சீனாவுடன் இணைக்கும் கழுத்துப் போன்ற இந்த பகுதி யுத்தங்களுக்குப் பாகாப்பான ஒரு பகுதியாகும். சீனாவின் பல பிரசித்தி பெற்ற யுத்தங்கள் இங்கிருந்தே முறியடிக்கப்பட்டுள்ளன. இந்தக் கம்பீரமான சதுரக் கால்வாய் ஒவ்வொரு பக்கத்திலும் நான்கு வாசல்களைக் கொண்டுள்ளது.

இரண்டு மாடிகளையுடைய கிழக்கு வாசற் கோபுரத்தின் உச்சியில் 'தியன் சியா டி யி குவான்' என்ற ஐந்து பெரிய சீன எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட கிடைநிலையான பலகையொன்று இருக்கின்றது. 'தேவலோகத்துக்குக் கீழுள்ள முதலாவது கணவாய்' என்பது இதன் பொருளாகும். பெருஞ்சுவரின் தொடக்கமாக இக்கணவாய் அமைந்துள்ளது. மிங் வம்ச காலத்தில் நிறுவப்பட்ட இரும்புப் பீரங்கிகள் அங்கு இருக்கின்றன. அதற்கு வடக்கில் நகரக் கோட்டைகள், வாயில்கோபுரங்கள், பாளையங்கள் ஆகியவற்றின் எச்சங்களை இன்றும் காணக்கூடியதாக உள்ளன.

அத்துடன், பெருஞ்சுவரின் கைப்பிடியிலிருந்து மழைநீரை வெளியேற்றுவதற்கான தும்புகளுடைய வடிகால்களும் அமைக்கப்பட்டுள்ளன. இரண்டு மாடிகளையுடைய வாசற்கோபுரங்கள் 100 மீற்றர் இடைவெளியில் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றின் மேல்மாடி எதிரிகளை அவதானிக்கும் பொருட்டும் கீழ்மாடி தானியங்கள், ராணுவ சாதனங்கள், வெடிமருந்துகள் சேகரித்து வைப்பதற்கும் காவல் துருப்புக்கள் தங்கியிருப்பதற்கும் ஏதுவாக அமைக்கப்பட்டுள்ளது. வாசற்கோபுரம் குன்றின் உச்சியில் அமைந்துள்ளது. செங்குத்தான ஏணியின் மூலம் கோபுர உச்சியை அடையமுடியும். அதன் உச்சியிலிருந்து பார்க்கும்போது நாலாபுறங்களிலும் வளைந்து நெளிந்து காணப்படும் மலைகளின் ரம்மியத்தை ரசிக்கலாம்.

சீன வரலாற்றில் ஜியாயுகுவான் கணவாயானது முக்கியமானதொரு தொடர்புக் கேந்திர நிலையமாக விளங்குகின்றது. தெற்கில் உறைபனி படிந்த 'ஜூலியான்' மலைத்தொடர்களுக்கும் வடக்கில் 'மாசொங்' மலைத்தொடர்களுக்குமிடையிலுள்ள இந்தக் கணவாய், புராதன பட்டுப்பாதையின் ஒரு முக்கிய முனையாகும். இந்தக் கணவாயூடாகவே சீனப்பட்டு மேற்கு நாடுகளுக்குப் போய்ச் சேர்ந்துள்ளது.

மிங் வம்ச சக்கரவர்த்தியான சுயுவான் சான் 1372 இல் சுவரைப் பழுதுபார்த்து பலப்படுத்த வேண்டுமென்று உத்தரவிட்டபோது, ஜியாயுகுவான் வாசற்கோபுரம் உள்நகரம், வெளிநகரம் என இரண்டு பகுதிகளாக நிர்மாணிக்கப்பட்டன. 11.7 மீற்றர் உயரமும் 7.3 மீற்றர் சுற்றளவுமுடையதாக ஒன்றையொன்று நோக்கும் கோபுரங்கள் கொண்ட கிழக்கு-மேற்கு வாசல்கள் அவற்றுக்குள்ளன. மேற்கு வாசலுக்கு வெளியேயுள்ள கற்சாசனமொன்று 'இது தேவதோகத்தின் கீழுள்ள யுத்த தந்திரக் கணவாய்' என்று பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. இந்தக் கோபுரங்களைக் கட்டுவதற்கு உபயோகிக்கப்பட்ட செங்கற்களில் மிஞ்சிய ஒரு கல் வாயிற்கோபுரமொன்றில் இன்றும் காணப்படுகின்றது.

**-செம்மைத்துளியான்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் உய




மனிதனால் கட்டப்பட்ட வானைத் தொடுவது போன்ற கட்டடங்களும் கோபுரங்களும் (Skyscrapers) உலகில் பல உள்ளன. இவற்றுள் அண்மையில் இன்னொரு கட்டடமும் இணைந்துகொண்டது. அதுதான் 'பர்ஜ் கலீபா' என்ற கட்டடமாகும். தற்போது உலகின் உயரமான கட்டடமாக இது கருதப்படுகின்றது. 828 மீற்றர் அதாவது, 2,717 அடி உயரம் கொண்ட இந்த கட்டடம் கடந்த ஜனவரி 4 ஆம் திகதி ஐக்கிய அரபு ராச்சியத்தில் திறந்து வைக்கப்பட்டது. இது 200 மாடிகளைக் கொண்டது. இதில் 160 மாடிகளே மனித குடியிருப்புக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. ஏனைய 40 மாடிகளும் கட்டடத்தின் பராமரிப்பு சேவைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. இதனைக் கட்டி முடிக்க 1.5 பில்லியன் டொலர் செலவாகியுள்ளது.

இந்த கட்டடம், டுபாயின் ஆளுநர் மொகமட் பின் ரஷீட் அல்-மக்டொமியால் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. இவர் கட்டடத்தை திறந்து வைத்தது மட்டுமன்றி அதற்கு முன்னர் சூட்டப்பட்ட பெயரையும் மாற்றினார். இதற்கு முன்னர் சூட்டப்பட்ட பெயர் 'போர்ஜ் டுபாய்' என்பதாகும். தற்போது அது 'பர்ஜ் கலீபா' என்று அழைக்கப்படுகின்றது. ஐக்கிய அரபு ராச்சியத்தின் ஜனாதிபதி ஷுக் கலீபா பின் செயிட் அல் நயனுக்கு மரியாதை செலுத்தும் வகையில் இப்பெயர் சூட்டப்பட்டுள்ளது. ஐ.அ.ராச்சியத்தில் அபுதாபியின் ஷேக்காக கலீபா உள்ளார். டுபாய் அரசாங்கம் கடந்த ஆண்டு கடும் நிதி நெருக்கடியை எதிர்கொண்ட போது அக்கடன் சுமையைத் தீர்க்க அபுதாபி அரசு 10 பில்லியன் டொலரை வழங்கி உதவியது.

''அன்று முதல் ஐ.அ.இராச்சியம் உலகின் உயரமான கட்டடமுள்ள நாடாக மாறுகின்றது. மனிதனால் கட்டப்பட்ட இந்த விசேட கட்டடத்திற்கு விசேடமான பெயர் தேவைப்படுகின்றது. இதனால், இதனை பர்ஜ் கலீபா என்று அழைப்போம்'' என்று கட்டடத்தை திறந்து வைத்தபோது ஷேக் மொகமட் கூறினார்.

இக்கட்டடத்தை திறந்து வைத்தபோது நடைபெற்ற விழாவில் ஐக்கிய அரபு ராச்சியத்தின் கொடியின் நிறங்களான சிவப்பு, பச்சை, கறுப்பு மற்றும் வெள்ளை நிறம் கொண்ட உடைகளை அணிந்த பரசூட் வீரர்கள் வானிலிருந்து ஷேக் கலீபாவின் பிரமாண்டமான உருவப்படத்தை கட்டடத்தின் வெளிப்புறத்தில் தொங்கவிட்டனர். அதுமட்டுமன்றி வாணவேடிக்கை நிகழ்வுகளும் இடம்பெற்றன.






ஷேக் கலீபா திறந்து வைத்தபோது



அலங்கார வாண வேடிக்கைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரமான கட்டடம்

## தாய்ப்பே 101: உயரம் 509 மீற்றர்



தாய்வானின் கௌரவ சின்னமாகக் கருதப்படும் தாய்ப்பே-101 அல்லது தாய்ப்பே வர்த்தக நிலையக் கட்டடம் தாய்வானின் தாய்ப்பே நகரில் ஷின்யீ மாவட்டத்தில் உள்ளது. 'பார்ஜ் கலீபா' அமைக்கப்படும் வரை இது உலகின் உயர்மான கட்டடமாக மூன்றாண்டுகள் வரை புகழ் பெற்றிருந்தது. தாய்ப்பே 101 கட்டடம் 2004 ஆம் ஆண்டில் விசேட வானை முட்டும் கட்டடமாக 'எம்போரிஸ் [illegible]ருதினைப் பெற்றுக் கொண்டது. 2006 ஆம் ஆண்டு 'நியூஸ்வீக்' சஞ்சிகை இந்த கட்டடத்தை நவீன உலகின் ஏழு அதிசயங்களில் ஒன்றாகப் பிரகடனப்படுத்தியது. 2005 இல் 'டிஸ்கவரி' தொலைக்காட்சி 'தாய்ப்பே 101' கட்டடத்துக்கு 'பொறியியல் அதிசயம்' என்று பெயரிட்டது. இக்கட்டடம் 101 மேல் மாடிகளையும் ஐந்து கீழ் மாடிகளையும் கொண்டது. புதிய தொழில்நுட்பம் மற்றும் ஆசிய சம்பிரதாயத்திற்குப் பொருந்தும் வகையில் கட்டப்பட்டுள்ள தாய்ப்பே 101 இயற்கை பாதிப்புகளை எதிர்கொள்ளும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. சொகுசு வர்த்தக நிலையங்கள், பொருட்கள், உடைகள், ஓய்வு நிலையங்கள், உணவு விடுதிகள், சமூக நிலையங்கள் இங்குள்ளன. இதனை 2004 இல் கட்டி முடித்தனர். இதன் உயரம் 1,671 அடியாகும்.

## ஹொங் கொங் சர்வதேச வர்த்தக நிலையம்: உயரம் 483 மீற்றர்



ஹொங்கொங்கின் மேற்குப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இதனை 'ஐ.சி.சி' என்றும் அழைப்பர். இது 118 மாடிகளைக் கொண்டது. இந்த கட்டடத்தின் கீழ்ப்பகுதியில் 'கொவுலொன்' சுரங்க ரயில் நிறுத்துமிடம் உள்ளது. ஹோட்டல்கள், அலுவலகங்கள் இங்குள்ளன. இது 2010 இல் திறந்து வைக்கப்பட்டது. உயரம் 1,584 அடிகளாகும்.

## சிகாகோ நகர 'வில்ஸ்' கோபுரம்: உயரம் 442 மீற்றர்



வில்ஸ் கோபுரம் என்றழைக்கப்பட்டாலும் முன்னர் இதனை 'சியர்ஸ்' கட்டடம் என்றழைத்தனர். 108 மாடிகள் கொண்ட இக்கட்டடம் 1973 இல் கட்டி முடிக்கப்பட்டு 'வில்ஸ்' கோபுரம் என பெயரிடப்பட்டது. இதன் உயரம் 1,451 அடிகள்.

## மலேசியாவின் இரட்டைக் கோபுரங்கள்: உயரம் 452 மீற்றர்



பெட்ரோன் இரட்டைக் கோபுரங்கள் எனப்படும் இந்த கட்டடங்கள் மலேசியாவின் கோலாம்பூரில் உள்ளன. இவை உலகின் உயரமான இரட்டைக் கோபுரங்களாக விளங்கின. 1998 முதல் 2004 வரை, தாய்ப்பே 101 கட்டடம் நிர்மாணிக்கப்படும் வரை இவ்வாறு புகழ் பெற்ற கட்டடமாக இவை திகழ்ந்தன. இரண்டு கட்டடங்களிலும் 88 மாடிகள் உள்ளன. 1998 இல் நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்தன. உயரம் 1,483 அடிகளாகும்.

## குவன்ஷோ மேற்கு கோபுரம்: உயரம் 440 மீற்றர்




சீனாவின் தியன்ஹே மாவட்டத்தில் 'குவன்ஷோ' வானை முட்டும் கட்டடமாக அமைக்கப்பட்டுள்ளது. 2005 இல் இதன் நிர்மாணப் பணிகள் ஆரம்பமாயின. 2009 இல் பணிகள் நிறைவுற்றன. ஹோட்டல், வர்த்தக நிலையங்கள் இங்குள்ளன. 103 மாடிகளைக் கொண்ட இதன் உயரம் 1,444 அடிகளாகும்.

## ஷங்காய் உலக வர்த்தக நிலையம்:உயரம் 492 மீற்றர்



உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் அழகுமிகு இந்தக் கட்டடம் சீனாவின் ஷங்காய் நகர பூடோனில் அமைந்துள்ளது. அலுவலகம், ஹோட்டல்கள், உணவு விடுதிகள், கடைகள், கருத்தரங்குக் கூடங்கள் என்பன இங்குள்ளன. கட்டடத்தினுள் 174 ஹோட்டல் அறைகள் உள்ளன. இதில் அதிசொகுசு வீடுகளும் உள்ளன. இது உலகின் உயரமான ஹோட்டலாகும். சீனாவில் உள்ள உயரமான கட்டடமும் இதுவாகும். 2008 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 28 இல் இது உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இது 101 மாடிகளைக் கொண்டது. உயரம் 1,614 அடிகள்.

## நங்ஜின் கிறீன்லண்ட் வர்த்தக நிலையம்: உயரம் 450 மீற்றர்



இது சீனாவின் நங்ஜின் நகரில் கட்டப்பட்டுள்ளது. ஹோட்டல், வர்த்தக நிலையம், அலுவலக அறைகள் கொண்டது. சீனாவில் உள்ள இரண்டாவது உயரமான கட்டடம் இதுவாகும். இக்கட்டடத்தை பார்ஜ் கலீபா கட்டடத்தை வடிவமைத்த மிரிடில் ஸ்டெபலா மற்றும் ஏட்ரியன் ஸ்மித் ஆகியோரே வடிவமைத்தனர். 89 மாடிகள் கொண்ட இந்தக் கட்டடத்தின் உயரம் 1,476 அடிகளாகும். இதனை 2009 ஆம் ஆண்டு கட்டிமுடித்தனர்.

## ட்ரம்ப் கோபுரமும் ஹோட்டலும்: உயரம் 423 மீற்றர்



பிரபல வர்த்தகர் டொனல்ட் ட்ரம்ப்பின் இந்தக் கோபுரம் அமெரிக்கா சிகாகோவின் இலினொயில் அமைக்கப்பட்டது. அதிசொகுசு ஹோட்டல் அறைகளைக் கொண்ட இந்த கட்டடத்தில் 96 மாடிகள் உண்டு. 2009 இல் இது திறந்து வைக்கப்பட்டது. இது 1,389 அடி உயரம் கொண்டது.

## ஜிங் மாவோ கோபுரம்: உயரம் 421 மீற்றர்



சீனாவின் ஷங்காய் மாவட்டத்தில் பூடோங் பகுதியில் லுஜியாசூஹியில் அமைக்கப்பட்டுள்ளது. பிரபலம் வாய்ந்த 'ஷங்காய் கிராண்ட் ஹியெட்' ஹோட்டலும் இந்த ஜிங்மாவோ கோபுரத்தில் உள்ளது. வர்த்தக நிறுவனங்கள் சில இங்குள்ளன. 1998 இல் திறக்கப்பட்ட இந்த கட்டடத்தில் 88 மாடிகள் உண்டு. உயரம் 1,380 அடிகளாகும்.

(இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் ஒரு நாடு

# அங்கோலா



லோண்டா நகரின் தோற்றம்

தேசிய இலச்சினை




**அரசு:** ஒரு சட்ட சபை கொண்ட பல கட்சிகளுடைய ஜனாதிபதி ஆட்சி நிலவும் குடியரசு.

**தேசிய பெயர்:** ரிபப்ளிகா டி அங்கோலா (Republic of Angola)

**சுதந்திரம்:** போர்த்துக்கல்லிடம் இருந்து -1975 நொவெம்பர் 11.

**ஜனாதிபதி:** ஜோஸ் எட்வர்டோ டொஸ் சென்டோஸ்.

**உப ஜனாதிபதி:** பெர்ணாண்டோ டி பிடேட் டயஸ் டொஸ் சென்டோஸ்.

## புவியியல்

அங்கோலா, ஒரு தென்மேற்கு ஆபிரிக்க நாடாகும். மத்திய ஆபிரிக்க மேட்டுநிலத்தின் ஒரு பகுதி இந்நாட்டில் அமைந்துள்ளது. நாட்டின் கரையோரப்பகுதி அட்லாண்டிக் சமுத்திரத்துடன் நீண்டு செல்கின்றது. கிழக்குப் பிரதேசம் சரிவான நிலத் தோற்றத்தைக் கொண்டுள்ளது. நாட்டின் பெரும்பாலான நிலப் பகுதி 'கலகாரி' பாலைவனத்தின் ஒரு பகுதியாகவே அமைந்துள்ளது.'சவன்னா' புல்வெளிகளில் ஒரு பகுதியையும் இது கொண்டுள்ளது. வடகிழக்கில் வன்மையான மரங்களைக்கொண்ட அடர்ந்த காடுகள் காணப்படுகின்றன. பல பெரிய நதிகளும் உள்ளன. அவற்றில் கொங்கோ நதி, குவாண்டோ நதி, குபாங்கோ நதி ஆகியவை குறிப்பிடத்தக்கன. தவிர, பெருமளவிலான உபநதிகளும் பாய்கின்றன.



**எல்லைகள்:** **கிழக்கு**-செம்பியா; **வடக்கு** மற்றும் **கிழக்கு**-கொங்கோ ஜனநாயக குடியரசு மற்றும் கொங்கோ குடியரசு; **தெற்கு** நமீபியா.

**மொத்த நிலப்பரப்பு:** 481,350 சதுர மைல் (1,246,699 ச.கி.மீ).

**தலைநகரமும் பெரிய நகரமும்** (2003): லோண்டா.

**ஏனைய பெரிய நகரங்கள்:** ஹுவாம்போ, லுபான்கோ.

**நிலப்பிரிவுகள்:** 18 மாகாணங்கள்.

**உயர் மலைச்சிகரம்:** மொர்ரோ டி மோகோ-2,620 மீற்றர் (8592 அடி);

**தாழ் மையம்:** அட்லாண்டிக் சமுத்திரம், கடல் மட்டம்.

**காலநிலை:** இங்கு வறண்ட வெப்பமான காலநிலையே பெரிதும் நிலவுகின்றது. மே முதல் ஒக்டோபர் வரை உலர் வெப்பக் காலநிலையும் நொவெம்பர் முதல் ஏப்ரல் வரை மழைக்காலமும் நிலவுகின்றன.

**மக்கள் தொகை** (2009): 12,799, 293.

**நாணயம்:** நிவ் குவான்ஸா.

**மொழிகள்:** போர்த்துக்கேயம் (உத்தியோகபூர்வ மொழி), பண்டு மற்றும் ஏனைய ஆபிரிக்க மொழிகள்.

**இனங்கள்:** ஓவிம்புண்டு 37%, கிம்புண்டு 25%, பாகொங்கோ 13%, மெஸ்டிகோ (ஐரோப்பிய மற்றும் ஆபிரிக்க கலப்பினம்) 2%, ஐரோப்பியர் 1%, ஏனையவை 22%.



ஜனாதிபதி

**சமயம்** (1998): உள்நாட்டு நம்பிக்கைகள் 47%, ரோமன் கத்தோலிக்கம் 38%, புரட்டஸ்தாந்து கிறிஸ்தவம் 15%.

**எழுத்தறிவு வீதம்** (2001): 67.4%.

**இணையத்தளக் குறியீடு:** .ao

**தொலைபேசி இலக்கக் குறியீடு:** +244.

**தேசிய சின்னங்கள்:** பறவை-Peregrine Falcon; மிருகம், மலர், மரம், விளையாட்டு என்பன பிரகடனப்படுத்தப்படவில்லை.

**தேசிய கீதம் (போர்த்துக்கேய மொழியில்)**

O Patria, nunca mais esqueceremos
Os herois do quatro de Fevereiro.
O Patria, nos saudamos os teus filhos
Tombados pela nossa Independencia....என ஆரம்பமாகின்றது.

## வரலாறு

சொய்சன் எனும் மொழி பேசும் மக்களே பூர்வீக அங்கோலா குடிகள் ஆவர். இவர்களுக்கு 1000 வருடங்களின் பின்னர் பெருந்தொகையான பண்டு மொழி பேசும் மக்கள் இடம்பெயர்ந்து வந்து இங்கு குடியேறி, இந்நாட்டின் பெரும்பான்மை மக்களாயினர். பண்டு பேரரசின் 'ங்கோலா' எனும் அரசனின் பெயரில் இருந்துதான் 'அங்கோலா' என்ற பெயர் வந்தது. பிறநாட்டவர்களில் போர்த்துக்கேய நாடுகாண் பயணியான டியாகோ காவோ என்பவர்தான் 1482 இல் அங்கோலாவைக் கண்டறிந்தார். கி.பி 1500 இலிருந்து போர்த்துக் கேயரின் ஆதிக்கத்துக்குட்பட்டது.

1975 இல் போர்த்துக்கேயரிடம் இருந்து சுதந்திரம் பெற்றது. தொடர்ந்து கியூபா மற்றும் ஐக்கிய சோவியத் சமவுடமை குடியரசின் ஆதரவு பெற்ற மார்க்ஸிஸ்ட் அரசு உருவானது. 1988 இல் கையெழுத்திடப்பட்ட நியூயோர்க் ஒப்பந்தத்தை அடுத்து, உள்நாட்டுக் கலவரங்கள் தொடர்ந்தன. 1992 இன் பின் இன்றுவரை பொதுத்தேர்தல்கள் எதுவும் நடைபெறவில்லை. 1979 ஆம் ஆண்டு அதிகாரத்திற்கு வந்த எட்வர்டோ சென்டோஸ் என்பவரே இப்போதும் ஜனாதிபதியாகப் பதவி வகிக்கின்றார்.



சா பண்டேய்ரா பிரதான ஆலயம்

## கலாசாரம்

பல்வேறு இனக்குழுக்களின் கலாசாரத் தாக்கங்கள் இங்கு காணப்படுகின்றன. ஏறக்குறைய 475 வருடங்களுக்கு மேல் போர்த்துக்கேயரின் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்ததால், அந்நாட்டு கலாசாரங்களும் இங்கு பரவியுள்ளன. பண்டு கலாசாரத்துடன் கலந்த போர்த்துக்கேய கலாசாரமும் ஏனைய இனக் குழுக்களின் கலாசாரமும் நிலவுகின்றது.

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்:** **பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள்** (2006) - 98,200; **செல்லிடத் தொலைபேசி பாவனையாளர்கள்** - 2.264 மில்லியன். **வானொலி நிலையங்கள்** (2001): AM 21, FM 6, SW 7. **தொலைக்காட்சி நிலையங்கள்** (2000): 6. **இணையத்தள வழங்குனர்** (2007): 3,337. **இணையத்தள பாவனையாளர்கள்:** 85,000.

## போக்குவரத்து

**புகையிரத பாதைகள்** (2006): 2,761 கி.மீ. **பெருந்தெருக்கள்:** மொத்தம் 51,429 கி.மீ (இதில் செப்பனிடப்பட்டவை-5349 கி.மீ; செப்பனிடப்படாதவை-46080 கி.மீ). **நீர்வழிப் போக்குவரத்து** (2007): 1300 கி.மீ. **துறையும் துறைமுகங்களும்:** கெபின்டா, லோண்டா, சோயோ. **விமான நிலையங்கள்** (2007): 232.

## பொருளாதாரம்

**விவசாயம்** (பயிர்ச்செய்கைக்கேற்ற நிலம் 2.65%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** வாழை,கரும்பு, கோப்பி, சோளம்,பருத்தி, மரக்கறி வகைகள், கால்நடைகள், மீன். **தொழிலாளர் தொகை** (2007): 6.573 மில்லியன் (விவசாயம் 85%, கைத்தொழிலும் சேவைகளும் 15%). **வேலையற்றோர்** (2001): நாட்டின் மொத்த சனத்தொகையில் வேலையற்றோரின் தொகை அரைவாசிக்கும் அதிகமாகும். **கைத்தொழில்கள்:** சீமெந்து, அடிப்படை உலோக உற்பத்திகள், உணவுப் பொருட்கள், புடவை வகைகள், மதுபானம் வடித்தல். **இயற்கை வளங்கள்:** பெற்றோலியம், கனிய வளங்கள். **ஏற்றுமதிகள்** (2007): சுத்திகரிக்கப்படாத மசகு எண்ணெய், வைரக்கற்கள், சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள், மீன் மற்றும் மீன் உற்பத்தி, விலையுயர் மரங்கள். **இறக்குமதிகள்** (2007): இயந்திரங்களும் மின் உபகரணங்களும், வாகனங்களும் வாகன உதிரிப்பாகங்களும், மருந்து வகைகள், புடவை வகைகள். **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்** (2006): ஐக்கிய அமெரிக்கா,சீனா,தாய்வான், பிரான்ஸ்,சிலி.

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில...

* கலண்டுலா நீர்வீழ்ச்சி * கறுப்பு கற்பாறைகள் * கிசாமா தேசிய பூங்கா * சா பண்டேய்ரா பிரதான ஆலயம் * சிடாடெல் அரங்கு * ஈரொட் அரண் * மலையூடான வளைவு பாதைகள்.




கலண்டுலா நீர்வீழ்ச்சி

ஈரொட் அரண்

மலையூடான வளைவு பாதைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# லூயி பாஸ்ச்சரின் கதை



அக்காலத்தில் விசர் நாய்க் கடிக்கு சரியானதொரு சிகிச்சை முறை இருக்கவில்லை. வெறி நாய் ஒன்றால் ஒருவர் கடிபட்டால் அவருக்கான சிகிச்சையை அந்த ஊரில் உள்ள கொல்லன் ஒருவரே மேற்கொள்வார். கூரான இரும்பை நன்றாகத் தீயில் பழுக்க வைத்து விசர் நாய் கடித்துக்குதறிய காயத்தின் மேல் பாய்ச்சுவதே அக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட சிகிச்சை முறையாக அமைந்தது. ஆனால், இத்தகைய சிகிச்சை முறையினால் நோய் சுகம் பெறுவதற்கு அவர் மாபெரும் புண்ணியம் செய்தவராக இருக்கவேண்டும். அந்த அளவிற்கு விசர் நாய்க்கடியால் அக்காலத்தில் சுகம் பெற்றவர்கள் அபூர்வத்திலும் அபூர்வம்.

ஒன்பது வயதுச் சிறுவனாக இருந்த போது ஒருநாள் விசர் நாய்க்கடிக்கு இத்தகைய கொடூரமான சிகிச்சை அளிப்பதைக் கண்ணுற்ற சிறுவன் பாஸ்ச்சர் இதைவிட நல்லமுறையில் சிகிச்சை அளிக்கக்கூடியதாக இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என சிந்தித்தான்.

ஏறக்குறைய 50 வருடங்களுக்குப் பின் அந்தக் கனவு நனவாகியது. ஆம்! அவர் தீவிர முயற்சியினால் விசர்நாய் கடிக்கு சரியானதொரு சிகிச்சையைக் கண்டுபிடித்தார். அது மாத்திரமல்ல இன்னும் பல நோய்களுக்குரிய காரணங்களையும் அதற்கான மருத்துவத்தையும் விஞ்ஞான விளக்கங்களையும் அவரே கண்டுபிடித்தார்.




## பிள்ளைப் பருவம்

லூயி பாஸ்ச்சர் பிரான்ஸ் நாட்டில் ஜீரா மாநிலத்தில் டோல் என்ற சிற்றூரில் 1822 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27 ஆம் திகதி ஜோசப் பாஸ்ச்சர் என்பவருக்கு மகனாகப் பிறந்தார். இவரின் தாயாரின் பெயர் ஜீன் எடினப் ரோக்யீ என்பதாகும். இவரின் தந்தை ஜோசப் பாஸ்ச்சர் பிரான்ஸ் மாவீரன் நெப்போலியன் பொனபாட்டின் படையில் ஒரு போர் வீரனாக பணியாற்றினார். நீண்ட காலம் படைவீரராகப் பணியாற்றிய பின்னர் பாஸ்ச்சரின் குடும்பம் ஆபோய் என்ற ஊருக்கு இடம் மாறியது.





## கல்வி நடவடிக்கைகள்

லூயி பாஸ்ச்சரை ஆபோய் நகரத்தில் இருந்த ஒரு பாடசாலையில் சேர்த்தார்கள். லூயி பாடசாலையில் சிறந்த ஒரு மாணவராகத் திகழ்ந்தார்.

பாரிசில் வசித்துக்கொண்டிருந்த ஜோசப் பாஸ்ச்சரின் நண்பர் பேர்பையர் ஜோசப்பை இச்சந்தர்ப்பத்தில் சந்தித்தார். ஜோசப்பின் பொருளாதார நிலையை உணர்ந்த நண்பர் ஜோசப்பிற்கு உதவு முடிவுசெய்தார். பாரிசில் பேர்பையர் தனது நண்பரான பார்பட் என்பவரின் பாடசாலையில் 1842 இல் லூயி பாஸ்ச்சரை மாணவராகச் சேர்த்தார்.

அப்பாடசாலையில் இறுதித் தேர்வில் மிகச் சிறந்த மாணவனாக அதிக புள்ளிகளைப் பெற்று தேர்ச்சி பெற்றார் லூயி பாஸ்ச்சர். அதுவரை காலமும் தீர்க்கப்படாது இருந்த பல விஞ்ஞான முரண்பாடுகளை ஆய்வு செய்ததோடு, அவற்றைப் பரீட்சித்துப் பார்ப்பதிலும் தீவிரமாக ஈடுபட்டார். அத்தோடு, பௌதிகவியல் தேர்வில் பரிசு பெற்று தொடர்ந்து பட்டப் படிப்பில் இணைந்தார்.



## பேராசிரியர் தொழிலில் பிரவேசம்

அந்தக் கல்லூரியில் பணியாற்றிய டூமாஸ் மற்றும் பாலார்ட் ஆகிய பேராசிரியர்கள் லூயியின் திறமையை புரிந்து ஊக்கமளித்தனர். அப்போதே படிகங்கள் பற்றிய ஆய்வில் அவர் ஈடுபட்டார். பட்டப்படிப்பை முடித்ததும் பேராசிரியர் பாலார்ட் அவர்கள் லூயி பாஸ்ச்சர் கலாநிதி பட்டம் பெறவேண்டும் என விரும்பினார். எனவே, லூயி பாஸ்ச்சர் பேராசிரியர் பாலார்ட்டிடம் ஆராய்ச்சி மாணவராகச் சேர்ந்தார். அப்போது அவர் படிகங்களைபற்றிய ஆராய்ச்சிகளில் ஈடுபட்டார். இரு வருட ஆய்வின் பின் படிகங்கள் பற்றிய ஆய்வுக்கட்டுரையை பல்கலைக்கழகத்திடம் சமர்ப்பித்தார். லூயியின் ஆய்வுக் கட்டுரை அங்கீகரிக்கப்பட்டு அவருக்கு 1847 இல் கலாநிதி பட்டம் வழங்கப் பட்டது. கணித விஞ்ஞானம், பௌதிக விஞ்ஞானம், இரசாயன விஞ்ஞானம் ஆகியன அவர் பட்டப் படிப்பிற்காக தெரிவு செய்த விடயங்களாகும். படிகங்கள் பற்றிய லூயியின் ஆராய்ச்சி மிகவும் புகழ் பெற்றது. பேராசிரியர் பாலார்ட், பௌதிகவியல் அறிஞர் பியோட் ஆகியோரின் முயற்சியில் லூயி ஸ்ட்ராபேர்க் பல்கலைக்கழகத்தில் ரசாயனவியல் பேராசிரியராக நியமிக் கப்பட்டார்.

## ரெஸ்மிக் அமிலம் கண்டுபிடிப்பு

இந்நியமனத்தின் பின் விஞ்ஞான ஆய்வுகளை மிகச்சிறந்த முறையில் மேற்கொள்ள வாய்ப்புக் கிடைத்தது. அதன் விளைவாக 'டார்டரிக்' அமில வகைகள் இரண்டினை அவர் கண்டுபிடித்தார். டார்டரிக் அமிலத்தில் இருந்து 'ரெஸ்மிக்' அமிலத்தைத் தயாரிக்கும் முறையையும் கண்டறிந்தார். அதற்காக பிரெஞ்ச் அரசு அவருக்கு செந்நாடா (சிவப்பு நாடா) சாதனைப் பரிசை வழங்கியது.

கிருமிகள் காற்றின் மூலம் பரவுகின்றன என்ற புதிய கருத்தை உலகிற்கு முதன்முதலாக லூயி பாஸ்ச்சர் அறிவித்தார். இதனை நிரூபிக்கும் முயற்சியிலும் இறங்கினார்.

## பரிசோதனையின் வெற்றி

ஒரு பரிசோதனைக் குழாயில் நகரம் ஒன்றில் இருந்து காற்றை நிரப்பி மூடினார். மற்றொரு பரிசோதனைக் குழாயில் மாசு குறைந்த இயற்கையான கிராமிய சூழலிலிருந்து பெறப்பட்ட காற்றை நிரப்பி மூடினார். நகரத்துக் காற்றில் மிக அதிகளவில் கிருமிகள் இருந்தன. ஆனால், கிராமியக் காற்றிலோ மிகமிக குறைந்தளவு கிருமிகளே காணப்பட்டன. இதன்மூலம் காற்றில் நுண்ணுயிரிகள் கலந்திருக்கின்றன என்பதை உறுதி செய்தார்.

## நோய்க்கிருமிக் கோட்பாடு

நோய்கள் ஏற்படுவதற்கு நோய்க் கிருமிகள் மிக முக்கிய காரணம் என்பதை லூயி பாஸ்ச்சர் கண்டறிந்தார். 1870 ஆம் ஆண்டு அவர் இதனைக் கண்டுபிடித்தார். நோய்க்கிருமிகள் காற்றில் பரவி வியாதிகளை உண்டாக்குகின்றன என்ற உண்மையை முதன்முதலில் லூயி பாஸ்ச்சர் கண்டறிந்து கூறியபோது அதை யாரும் நம்பத் தயாராக இல்லை. இதை உறுதி செய்ய விரும்பிய லூயி தன்னிடம் காயத்தோடு சிகிச்சைக்காக வந்த ஒரு நோயாளியின் காயத்தை கார்போலிக் அமிலத்தால் சுத்தப்படுத்தினார். இதனால், காயமானது விரைவாக ஆறுவதைக் கண்டார்.

## தடுப்பூசி முறை

இத்தகைய ஆராய்ச்சியைத் தொடர்ந்து ஆடு, மாடு போன்ற விலங்குகளைத் தாக்கி அவற்றை அழிக்கும் 'ஆந்த்ரெக்ஸ்' எனும் நோய் குறித்து ஆராய ஆரம்பித்தார். இந்நோயால் பாதிக்கப்பட்ட விலங்குகளின் உடலில் இருந்து நோய்க்கிருமிகளை எடுத்து ஆராய ஆரம்பித்தார். பல ஆராச்சிகளுக்குப் பின் இந்நோய்க்கிருமிகளை அக்கிருமிகளைக் கொண்டே அழிக்கலாம் என்பதைக் கண்டறிந்தார். இதனால், தான் ஆய்வுக்காக வளர்த்த ஆந்த்ரெக்ஸ் நோய்க்கிருமிகளை நோய்வாய்ப்பட்ட ஆடு, மாடுகளுக்குச் செலுத்தி அவற்றை பிழைக்கச் செய்ததன் மூலம் நிரூபித்தார். இதன் மூலமாகவே தடுப்பூசி முறையைக் கண்டுபிடித்தார். அவரின் இக்கண்டுபிடிப்பு அவருக்குப் பெரும் புகழீட்டித் தந்தது. இதனால், பிரான்ஸ் அரசு தன்னால் வழங்கக்கூடிய மிக உயர்ந்த கௌரவ விருதை அவருக்கு வழங்கிக் கௌரவித்தது.



## விசர் நாய்க்கடிக்கு மருந்து

இதனை அடுத்து மற்றொரு முக்கிய ஆய்வில் பாய்ஸ்ச்சர் ஈடுபட்டார். அதுதான் வெறிநாய் கடிக்கான மருந்தைக் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியாகும். வெறிநாயின் உமிழ்நீர் மற்றும் இரத்தத்தைச் சேகரித்து ஆராய்ந்தார். அவை இரண்டிலும் எந்தக் கிருமிகளும் காணப்படவில்லை. பின் வெறி நாயின் மூளையை திரவ நிலைக்குக் கொண்டுவந்து அந்தத் திரவத்தை நோயற்ற நாயின் உடலில் செலுத்தினார். நோயற்ற அந்த நாயானது உடனே வெறிநாயாக மாறியது. வெறிநாய் ஒன்றின் மூளையை எடுத்து அதனைப் பதப்படுத்தினார். பின்னர் அதைப் பொடி செய்து திரவநிலைக்கு கொண்டு வந்தார். அந்த திரவத்தை வெறிநாய்கள் சிலவற்றின் உடலில் தொடர்ந்து செலுத்தி வந்தார். ஆச்சரியம் தரும் வகையில் வெறிநாய்கள் அந்த கொடிய நோயிலிருந்து விடுதலை பெற்றன. லூயி அவர்களின் இந்த அரிய முயற்சியால் மனித குலத்தை துன்புறுத்திய வெறிநாய்க்கடிக்கு மருந்து கண்டுபிக்கப்பட்டது.

ஆம்! 1885 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 5 ஆம் திகதி விசர் நாய்க் கடியால் பாதிக்கப்பட்ட ஜோசப் மிஸ்டர் எனும் 9 வயது சிறுவனை லூயி பாய்ஸ்ச்சரிடம் அழைத்து வந்தனர். தனது கண்டுபிடிப்பை பரிசோதிக்க தருணம் பார்த்திருந்த லூயிக்கு இது ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்தது. லூயி பாஸ்ச்சரின் தடுப்பூசியால் ஜோசப் மிஸ்டர் பூரண குணமடைந்தான். 1886 இல் மாத்திரம் 350 பேர் லூயி கண்டுபிடித்த தடுப்பூசியால் உயிர் பிழைத்தனர். லூயி பாஸ்ச்சரின் புகழ் பிரான்சில் மாத்திரமன்றி உலகெங்கும் பரவியது.

## உன்னத விஞ்ஞானியின் மறைவு

தான் பிறந்த மண்ணாகிய பிரான்சிற்கு மாத்திரமல்ல, முழு மனித குலத்திற்குமே நன்மை பயக்கும் தனது கண்டுபிடிப்புகளின் மூலம் உலகப் புகழ்பெற்ற அற்புத விஞ்ஞானியான லூயி பாஸ்ச்சர் 1895 ஆம் ஆண்டு செப்டெம்பர் திங்கள் 28 ஆம் நாள் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

-ரஞ்சித் ஜெயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## வினாத்தாள் II (கடந்த வாரத் தொடர்ச்சி)

சுட்டெண்: ................................ நேரம்: 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

★ *25 -29 வரையிலான வினாக்களுக்கு உரிய நட்சத்திரக் கோலங்களின் பெயரை தரப்பட்டுள்ள அடைப்பினுள் இருந்து தெரிவு செய்து எழுதுக.*

(இடபம், மிதுனம், விருச்சிகம், கார்த்திகை, கன்னி)



(25) ................ (26)............... (27)................ (28)............... (29)...............

★ *30-34 வரையிலான வினாக்களுக்கு காணப்படும் பிராணிகளின் பெயர்களை தரப்பட்டுள்ள அடைப்பினுள் இருந்து தெரிவு செய்து எழுதுக.*

(தீக்கோழி, கிவி, பிளற்றிபஸ், டொல்பின், எறும்புதின்னி)



(30) ................ (31)............... (32)................ (33)............... (34)...............

★ *35-39 வரையிலான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள பறவைகளின் பாதங்களுக்கும் அலகுகளுக்கும் உரிய பறவைகளின் பெயரை அடைப்பினுள் இருந்து தெரிவு செய்து எழுதுக.*

(கோழி, கழுகு, தாரா, மரங்கொத்தி, காகம்)



(35) ................ (36)............... (37)................ (38)............... (39)...............


(40) தாங்கி ஒன்றில் 29l 200ml நீர் இருந்தது. இந்த நீரில் 3l 850ml நீர் வீண் விரயமாக்கப்பட்டது. எனின், தற்போது தாங்கியில் உள்ள நீரின் அளவு யாது?

..........................................................................................


(41) 19kg சீனியை 500g கொண்ட பைக்கற்றுக்களில் அடைத்தால்;

(1) எத்தனை பைக்கற்றுக்களில் அடைக்கலாம்? ..................................................

(2) ஒரு பைக்கற் சீனியின் விலை ரூபா 20.00 ஆயின், மொத்தப் பைக்கற்றுக்களிலும் உள்ள சீனியின் விலை யாது?..................................................

(42)  இங்கு நிழற்றப்பட்ட பகுதியின் பரப்பளவு யாது? (ஒரு சதுரத்தின் பரப்பளவு $1cm^2$ எனக் கொள்க)

..........................................................................................

(43)  உருவில் நிழற்றப்படாத பகுதியின் பின்னம் யாது?

..........................................................................................

(44) ரோமன் எண்குறி இருபதை அமைக்க நான்கு குச்சிகள் பயன்படுத்த வேண்டும். எனின், ரோமன் எண்குறி பதினெட்டை அமைக்கப் பயன்படுத்த வேண்டிய குச்சிகளின் எண்ணிக்கை யாது?

..........................................................................................

(45) வைபவம் ஒன்றின்போது ஒரு பிள்ளைக்கு ஐந்து பிஸ்கட்டுகள் வீதம் 738 பிஸ்கட்டுகள் பகிர்ந்தளிக்கப்பட்டதன் பின்னர் 3 பிஸ்கட்டுகள் எஞ்சி இருந்தன. பிஸ்கட்டுகள் கிடைத்த பிள்ளைகளின் எண்ணிக்கை யாது?

..........................................................................................

★ *மாணவன் ஒருவன் தன்னைச்சுற்றி விளையாட்டுப் பொருட்களை வைத்திருக்கும் விதம் கீழே காட்டப்பட்டுள்ளது. அதனடிப்படையில் 46 முதல் 50 வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.*

| | | | |
|---|---|---|---|
| லொறி | கார் | படகு | வ ↑ |
| பந்து | (மாணவன்) | ஆகாயவிமானம் | |
| புகையிரதம் | பேருந்து | சைக்கிள் | |

(46) பேருந்து மாணவனுக்கு எத்திசையில் உள்ளது? (.......................................)

(47) புகையிரதம் படகிற்கு எத்திசையில் உள்ளது? (.......................................)

(48) மாணவனுக்கு நிருதி மூலையில் உள்ளது எது? (.......................................)

(49) மாணவன் நேராகச் சென்று பந்தை எடுக்கிறான். ஆயின், அவனுக்கு வலதுகை பக்கத்தில் உள்ளது எது?


(.......................................)

(50) பேருந்து பந்துக்கு எத்திசையில் உள்ளது? (.......................................)

★ *மாணவர்கள் சிலருக்கு விருப்பமான விளையாட்டுக்கள் கீழேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.*

| விளையாட்டு | மாணவர் தொகை |
|---|---|
| எல்லே | 6 |
| வலைப்பந்து | 8 |
| கிரிக்கெட் | 14 |
| கால்பந்து | 4 |
| கரப்பந்து | 8 |

(51) மேலே உள்ள தகவல்களை பின்வரும் வரைபில் குறித்துக் காட்டுக.




(52) சம தொகையான மாணவர்கள் விரும்பிய விளையாட்டுக்கள் எவை?

(.......................................)

(53) மிகக் குறைந்தளவு மாணவர்கள் விரும்பும் விளையாட்டிற்கும், மிகக்கூடுதலான மாணவர்கள் விரும்பும் விளையாட்டிற்கும் இடையிலான வித்தியாசம் யாது?

(.......................................)

(54) மொத்தமாக விளையாட்டை விரும்பும் மாணவர் தொகை யாது?

(.......................................)

(55) குயில் உங்களுக்கு நன்றாகவே தெரிந்த பறவைதான். கறுப்பாக இருந்தாலும் அதன் குரல் இனிமையானது. எல்லோரும் அதனைக் கேட்டு ரசிப்பார்கள். அந்தக் குயிலுக்கு இவ்வாறான சிறப்பு இருந்தாலும் அதைப்பற்றி மக்களுக்கு ஒரு குறை உண்டு. அது முட்டையிட்டு .................. இக்கதைப் பகுதியை தொடர்ந்து ஆறு வாக்கியங்களாக எழுதுக.

(ஒவ்வொரு வாக்கியமும் நான்கு சொற்களுக்கு குறையாமலும் எழுவாய், பயனிலை இயைபு திருத்தமானதாகவும் அமைதல் வேண்டும்)

(i) ..........................................................................................

..........................................................................................

(ii) ..........................................................................................

..........................................................................................

(iii) ..........................................................................................

..........................................................................................

(iv) ..........................................................................................

..........................................................................................

(v) ..........................................................................................

..........................................................................................

(vi) ..........................................................................................

..........................................................................................

விடைகள் 11ஆம் பக்கத்தில்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் சஞ்சிகைகளை வாசித்து எழுத்தாளரான

# 'மெக்சிம் கோர்கி'


**பாடசாலையில் மூன்றாம் வகுப்பு வரை மட்டுமே படித்துவிட்டு சிறுவர் சஞ்சிகைகளின் மூலம் தனது எழுத்துத்திறனையும் வாசிப்புத்திறனையும் வளர்த்துக்கொண்டு, உலகின் முதல்தர எழுத்தாளராவது சாத்தியமா? அவ்வாறு உருவானவர்தான் ரஷ்ய எழுத்தாளர் மெக்சிம் கோர்கி. இவரது வாழ்க்கை வரலாறு நமக்கெல்லாம் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.**

மெக்சிம் கோர்கியின் நிஜப்பெயர் 'எலக்சி மெக்சிமோவிச் பெஷ்கொவ்' என்பதாகும். ஜார் மன்னனிடம் அகப்படாதிருக்கவே அவர் தனது பெயரை 'மெக்சிம் கோர்கி' என்று வைத்துக்கொண்டார். காலப்போக்கில் அப்புனைபெயரே நிலைத்துவிட்டது.

### சிறுபராயம்

இவர் ரஷ்யாவிலுள்ள நிஸ்னி நொவ்கொரொட் எனும் நகரில் 1868 மார்ச் 16 ஆம் திகதி பிறந்தார். அவரது தந்தைவழிப் பரம்பரையும் தாய்வழிப் பரம்பரையும் வறிய குடும்பங்களாகவே இருந்துள்ளன. தந்தை தச்சு வேலை செய்து வந்ததோடு, அவரின் தாயார் வீட்டுப் பணிப்பெண்ணாக தொழில்புரிந்து வந்துள்ளார். மூன்றாம் வகுப்பில் படித்துக்கொண்டிருக்கும்போது தந்தையும் தாயும் ஒருவர் பின் ஒருவராக இறந்தனர். இதனால், அவர் பாட்டியின் அரவணைப்பில் வளர்ந்தார். பெற்றோர் இல்லாத சோகத்தைப் பாட்டியின் உவமைக் கதைகள் தீர்த்து வைத்தன.

குடும்ப வறுமை காரணமாக



பிரபல எழுத்தாளர் லியோ டோல்ஸ்டோயுடன் கோர்கி

பாடசாலையிலிருந்து விலகிய மெக்சிம் கோர்கி, பல்வேறு தொழில்களில் ஈடுபட்டார். அதன்படி, முதலில் கூலி வேலைகளை செய்து வந்தார். பின்னர், ஒரு ஹோட்டலில் பாத்திரங்களைக் கழுவும் வேலையைச் செய்து வந்தார். சிறிது காலத்தில் அங்கிருந்தும் விலகி, பாண் பேக்கரியிலும் அங்கிருந்து விலகி பாதணிகள் செய்யும் தொழிற்சாலையிலும் கை உதவிக்குப் போனார். அதனைத் தொடர்ந்து சிலகாலம் பாட்டனுக்குச் சொந்தமான ஓடத்தை ஓட்டி, காலப்போக்கில் கப்பல் சேவையில் இணைந்தார். இதன்போது கப்பல் சேவையுடன் தொடர்புடைய சமையற்காரனின் நட்புக் கிடைத்தது. இதன்போது, சமையல்காரனிடமிருந்து



மொஸ்கோவிலுள்ள கோர்கியின் சிலை

சிறுவர் சஞ்சிகைகளை வாசிப்பதற்கான சந்தர்ப்பம் கோர்கிக்கு கிடைத்தது. மிகுந்த ஆர்வத்துடனும் ரசனையுடனும் அவற்றைத் தொடர்ந்து வாசிக்கலானார். இதுவே அவரது எதிர்கால சாதனைக்கு அடித்தளமாக அமைந்தது எனலாம்.

### எழுத்துத்துறையில் பிரவேசம்

பாட்டி கூறியிருந்த உவமைக் கதைகளும் சிறுவர் சஞ்சிகையில் பிரசுரமான நீதிக்கதைகளும் அநீதிகளை எதிர்த்து நிற்பதற்கான மனோபாவத்தை அவருள் தூண்டின. இதனால், அது தொடர்பிலான கட்டுரைகளை எழுதி தனது எழுத்தாற்றலை வளர்த்துக்கொண்டார். இக்காலகட்டத்தில் நாட்டில் ஆட்சிபுரிந்த ஜார் மன்னனின் கொடுங்கோல் ஆட்சியை எதிர்த்து விமர்சனங்களையும் வெளியிட்டார்.

1884 இல் இருந்து ஆரம்பமான தொடர் விமர்சனங்களுக்காக 1889 ஆம் ஆண்டு கோர்கி சிறையில் அடைக்கப்பட்டார். சிறையிலிருந்த காலப்பகுதியில்

> **'பாட்டி கூறியிருந்த உவமைக் கதைகளும் சிறுவர் சஞ்சிகையில் பிரசுரமான நீதிக்கதைகளும் அநீதிகளை எதிர்த்து நிற்பதற்கான மனோபாவத்தை அவருள் தூண்டின'**

இவர் எந்தவொரு விமர்சனக் கட்டுரைகளையும் எழுதவில்லை. காரணம், அது தனது விடுதலையைத் தடை செய்துவிடும் என்பதில் அவர் அதிக அக்கறை காட்டினார். அதனால், சில மாதங்கள் கழித்து, 1890 இல் விடுதலையாகி, ஒரு வழக்கறிஞரிடம் எழுதுவினைஞராகத் தற்காலிகமாகத் தொழில்புரிந்தார். பின்னர் புகையிரதத் திணைக்களத்தில் களஞ்சியசாலையில் இணைந்தார்.

அங்கு தனக்குக் கிடைக்கும் ஓய்வு நேரங்களில் மெக்சிம் கோர்கி எதையேனும் வாசித்துக்கொண்டும் எழுதிக்கொண்டுமே இருந்தார். புகையிரதத் திணைக்களத்தில் ஒரு சிற்றூழியனாக இருந்துகொண்டு தரமான நூல்களை அவர் வாசிப்பது கண்டு அங்கிருந்த பலரும் இவரைக் கேலி செய்தனர். தொழிலில் ஈடுபட்டவாறே, கிடைக்கும் ஓய்வு நேரங்களில் தனது எழுத்தாற்றலை மேலும் வளர்த்துக்கொண்டார். அவற்றிலும் ஜார் மன்னனை விமர்சிக்கத் தவறவில்லை.


1892 ஆம் ஆண்டு வெளியான 'மகார் (ச்)சூட்ரா (Makar Chudra) என்பது மெக்சிம் கோர்கி எழுதிய முதலாவது சிறுகதையாகும். இந்த சிறுகதையினால் இவர் பிரபல்யமானார். அத்துடன், அவரது 'ஃபொமா கர்தயெவ்' (Foma Gordeyev) எனும் நாவலும் புகழ் பெற்றது. எழுத்துத்துறை தவிர, இசை, நாடகங்களிலும் அவர் தீவிர ஆர்வம் காட்டினார். பிற்காலத்தில் ஒரு நாடக எழுத்தாளராகவும் கோர்கி பிரசித்தி பெற்றார்.

1907 ஆம் ஆண்டில் கோர்கி அமெரிக்காவிலிருந்தபோதுதான் 'த மதர்' (The Mother) எனும் நாவலை எழுதினார். பின்னர் 'எனது சிறுபராயம்' (The Childhood) எனும் நாவலை எழுதினார். இந்த நாவல் அவரது சுயவரலாறு என்றே நம்பப்படுகிறது. 'எனது பல்கலைக்கழகங்கள்' (My Universities) எனும் நூல் இளமைக்காலத்தில் அவர் எதிர்கொண்ட சவால்களை விளக்குகின்றது. 1917 ஆம் ஆண்டு புதுவாழ்வு (Newlife) எனும் பத்திரிகையை வெளியிட்டார். ரஷ்ய இலக்கியம் முன்னேற எழுத்தாளர்களுக்கு வழிகாட்டி நின்ற கோர்கி, ஜார் மன்னராட்சிக்குப் பின் உண்மையான ரஷ்ய இலக்கியத்தை அடையாளம் காட்ட பெருமுயற்சி செய்தார்.

ரஷ்யப் புரட்சித்தலைவரான லெனினின் நெருங்கிய நண்பரான மெக்சிம் கோர்கிக்கு, லெனின் இலக்கிய ஒத்துழைப்பு வழங்கினார். 1934 ஆம் ஆண்டு முதற்தடவையாக ஆரம்பிக்கப்பட்ட சோவியத் எழுத்தாளர் சங்கத்தின் பொதுச்செயலாளர் பதவி மெக்சிம் கோர்கிக்கே வழங்கப்பட்டது. அன்றைய காலகட்டத்தில் அவர் உலகின் முதல்தர எழுத்தாளர்களில் ஒருவராகவே திகழ்ந்தார். இன்றளவிலும் அந்த புகழ் நீங்கவில்லை என்றே கூறவேண்டும்.

### இறப்பு

இத்தகைய பெருமைக்குரிய எழுத்தாளராக மிளிர்ந்த கோர்கி, நிவ்மோனியா காய்ச்சலால் பீடிக்கப்பட்டு, அவரது 68 ஆவது வயதில் 1936 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18 ஆம் திகதி இவ்வுலக வாழ்வை நீத்தார்.



கோர்கியின் கையொப்பம்

### மெக்சிம் கோர்கியின் படைப்புக்கள் சில....

- Twenty-six Men and a Girl (நாவல்)
- Song of a Falcon (சிறுகதை)
- The Mother (நாவல்)
- Okurov City (நாவல்)
- Untimely Thoughts (கட்டுரை)

**நாடகங்கள் சில**

* The Philistines
* The Lower Depths
* Summerfolk
* Children of the Sun
* Barbarians
* Enemies

**-ஏ.ஜே.எம்.நிழாம்**

### வினாத்தாள் II இன் விடைகள்

(மார்ச் 31, ஏப்ரல் 7 ஆம் திகதிகளில் பிரசுரமானவை)

(01) I. ஈகைகளில்/தர்மங்களில் II. இயற்கைக் காட்சி III. மடுக்கள்
IV. செயற்கை V. வானை முட்டுவதுபோல்
VI. அல்லும் பகலும் VII. சலசல VIII. உயிரினங்கள்
IX. சீரானநிலையில்/ஒழுங்கு முறையில்
X. அரிய காட்சியாகும்/கண்ணுக்கு விருந்தளிக்கும் காட்சியாகும்.

(02) I. கடல்கோளால் லட்சக்கணக்கானோரின் சொத்துக்கள் அழிக்கப்பட்டன.
II. மாணவர் படித்து இலங்கை சென்றனர்.

(03) I. முச்சுடர் II. இரு செல்வம்

(04) I. இடையன் II. கோவை

(05) I. வெண்ணெய் II. அடையாளங்களை

(06) I. Clap your hands II. Go to the front side

(07) I. தயவு செய்து என்னைக் கவனிக்கவும். II. தயவு செய்து விரைவுபடுத்துக.

(08) I. கதை சொல்லுங்கள் II. பாட்டுப் பாடுங்கள்

(09) 3 (10) 2 (11) 3 (12) 3 (13) 1 (14) 2

(15) III (16) 3 (17) 2 (18) 2 (19) 2 (20) 2

(21) 2 (22) 2 (23) 1 (24) 1

(25) மிதுனம் (26) இடபம் (27) கார்த்திகை (28) விருட்சிகம்

(29) கன்னி (30) டொல்பின் (31) தீக்கோழி

(32) எறும்புத் தின்னி (33) பிளற்றிபஸ் (34) கிவி (35) காகம்


(36) மரங்கொத்தி (37) கழுகு (38) தாரா (39) கோழி

(40) 25350ml (41) 38 (42) 760 ரூபாய் (43) 3/6

(44) 7 (45) 245 (46) தெற்கு (47) தென்மேற்கு

(48) புகையிரதம் (49) லொறி (50) தென்கிழக்கு

(51)




(52) வலைப்பந்து, கரப்பந்து

(53) 10 (54) 40

(55) ஒவ்வொரு வாக்கியமும் நான்கு சொற்களுக்கு குறையாமலும் எழுவாய், பயனிலை இயைபு திருத்தமானதாகவும் அமைதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவாக்க அதிகாரம் செ

**நாட்டின் அதிஉன்னத ஸ்தானமாக நாடாளுமன்றம் மதிக்கப்படுகின்றது. நாட்டுக்குத் தேவையான சட்டவாக்கம் மேற்கொள்ளப்படுவதும் இங்குதான். தவிர, நிதி தொடர்பான பரிசீலனை, மக்கள் பிரச்சினைகள் தொடர்பாக கவனம் செலுத்துதல் என்பனவும் நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்படுகின்ற ஏனைய சேவைகளாகும்.**

## பழைய நாடாளுமன்றம்

இலங்கையின் பழைய நாடாளுமன்றக் கட்டடம் காலி முகத்திடலுக்கு அருகாமையில் அமைந்திருக்கின்றது. இந்தக் கட்டடமே இலங்கையின் ஆரம்பகால சட்டவாக்க சபையாக இருந்து வந்தது. தற்போது இந்தக் கட்டடத் தொகுதியில் ஜனாதிபதி செயலகமும் நிதி அமைச்சும் அமைந்திருக்கின்றன.

1930 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதி அப்போதைய தேசாதிபதி சேர் ஹேர்பட் ஸ்டென்லி என்பவரால் இது திறந்து வைக்கப்பட்டது. அன்று முதல் 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரையில் இந்நாட்டின் நாடாளுமன்றமாக இக்கட்டடமே திகழ்ந்தது. அத்துடன், அக்காலத்தில் அக்கட்டடத்துக்கு 'நாடாளுமன்றம்' என்ற சொல் பயன்படுத்தப்படவில்லை. 'சட்டவாக்க சபை' என்றே அழைக்கப்பட்டது. சட்ட சபையாக இருந்தபோது 49 ஆசனங்கள் மட்டுமே காணப்பட்டன. பின்னர் 1947 ஆம் ஆண்டு சோல்பரி அரசியல் சீர்திருத்தத்தின்கீழ் உறுப்பினர்களின் எண்ணிக்கை 101 ஆக உயர்த்தப்பட்டது. 1959 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட தேர்தல் தொகுதி நிர்ணய சபையின் சிபாரிசுக்கமைய 101 ஆக இருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 157 வரையில் அதிகரிக்கப்பட்டது.

1972 ஆம் ஆண்டின் முதலாவது குடியரசு யாப்பின்கீழ் இந்த உறுப்பினர் எண்ணிக்கை 168 ஆக அதிகரிக்கப்பட்டது. இவ்வாறு மக்கள் பிரதிநிதிகள் எண்ணிக்கை உயர்வுக்கு ஏற்ப ஆசனங்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டு, வசதிகளும் விஸ்தரிக்கப்படலாயின. நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை இவ்வாறு உயர்வடைந்ததால் பழைய நாடாளுமன்றக் கட்டடத்தில் இட நெருக்கடி ஏற்பட்டது. இதனால், புதிய கட்டடம் ஒன்றை நிர்மாணிக்க வேண்டிய தேவை உணரப்பட்டது.



சபை மண்டபத்தை அலங்கரிக்கும் மின்விளக்குகள்



## புதிய நாடாளுமன்றம்

1977 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் பின்னர் பதவிக்கு வந்த ஐ.தே.க தலைமையிலான முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனவின் அரசாங்கம் ஸ்ரீ ஜயவர்தனபுரக் கோட்டேயில் புதிய நாடாளுமன்றக் கட்டடத்தை நிர்மாணிக்க முடிவு செய்தது. அதன்படி, கோட்டேயில் அமைந்துள்ள 'தியவன்னா' ஓயாவுக்கு நடுவில் அமைந்துள்ள சிறிய தீவில் இந்த நாடாளுமன்றத்தை நிர்மாணிப்பதென்று முடிவு செய்யப்பட்டது. இதனை நிர்மாணிப்பதற்காக 2 கோடி 54 லட்சம் அமெரிக்க டொலர்கள் (6 கோடி 30 லட்சம் ஜப்பானிய யென்கள்) செலவிடப்பட்டது.

எட்வட் ரீட் மற்றும் பேக் நிறுவனத்தின் கட்டடக் கலைஞரான ஜெஃப்ரி பாவா ஆகியோர் நாடாளுமன்றத்தின் பிரதான கட்டடக்கலை நிபுணர்களாவர். தவிர; ஜப்பான், மலேசியா, சிங்கப்பூர், பிலிப்பைன்ஸ், இலங்கை ஆகிய நாடுகளின் கட்டடக்கலை நிபுணர்களும் பொறியியலாளர்களும் நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டனர். இக்கட்டட நிர்மாணப் பணிகள் ஓரளவு பூர்த்தியடைந்த நிலையில், 1980 ஆம் ஆண்டு செப்டெம்பர் 22 ஆம் திகதி இரத்தினங்களை புதையலாகப் பதிக்கும் சம்பிரதாயபூர்வ வைபவம் நடைபெற்றது.

புதிய நாடாளுமன்றக் கட்டடம் அன்றைய ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்தனவால் 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது. இந்த நாடாளுமன்றக் கட்டடத்தை நிர்மாணிப்பதற்கு ஜப்பானிய அரசாங்கம் இலங்கைக்கு உதவிகளை வழங்கியிருந்தது.



தேசிய இலச்சினை





செங்கோல்

## சபை மண்டபம்

நாடாளுமன்ற சபை அமர்வு நடைபெறுகின்ற பகுதி சபை மண்டபம் (கருவறை) என்றழைக்கப்படுகின்றது. நாடாளுமன்றக் கட்டடத்தின் மத்திய பகுதியில் கூம்பு வடிவத்தில் நாடாளுமன்ற சபை அமர்வு நடைபெறும் சபை மண்டபம் இரண்டு மாடிகளுடன் அமைக்கப்பட்டிருக்கின்றது. இப்பகுதி 'Lobby' என்றழைக்கப்படுகின்றது.

சபை மண்டபத்தின் வலப்பக்கமாக இருபுறங்களையும் பார்க்கும் வகையில் சபாநாயகரின் ஆசனம் அமைந்திருக்கின்றது. சபாநாயகரின் ஆசனத்திற்கு முன்னாள் சற்றுத் தாழ்வாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம், உதவிச் செயலாளர் நாயகம், பிரதிச் செயலாளர் நாயகம் ஆகியோரின் ஆசனங்கள் உள்ளன. சபாநாயகரின் வலது புறத்தில் ஆளும் கட்சியினருக்கான ஆசனங்களும் இடது பக்கமாக எதிர்க்கட்சியினரின் ஆசனங்களும் வரிசைகளில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

சபாநாயகருக்கு வலப்புறமாக முன் வரிசையில் நான்காவது தொகுதியில் முதல் ஆசனம் பிரதமரின் ஆசனமாகும். அதற்கு நேர் எதிரே சபாநாயகருக்கு இடப்புறத்தில் எதிர்க்கட்சித் தலைவரின் ஆசனம் அமைந்திருக்கின்றது.


பிரதமருக்கு பக்கத்தில் உள்ள அடுத்த ஆசனம் நிதி அமைச்சருக்குரியதாகும். மேற்படி ஆசன ஒதுக்கீடானது முக்கியத்துவத்தின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. சகல அமைச்சர்களுக்குமான ஆசன ஒதுக்கீட்டை சபாநாயகரே மேற்கொள்வார்.

சபாநாயகரின் ஆசனத்தை மையப்படுத்தி இருபக்கங்களிலும் 116 ஆசனங்கள் என்ற அடிப்படையில் 232 ஆசனங்களுக்குரிய வசதிகள் இருப்பதோடு, மேலதிகமாக 16 ஆசனங்களும் உள்ளன.

## பார்வையாளர் கெலரி

சபை மண்டபத்தின் மேலாக ப[illegible]வையாளர் கெலரியும் பத்திரிகையாளர் கெலரியும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இங்கு ஒரே நேரத்தில் 600 பேர் அமர்ந்து பார்க்கக்கூடியதாக வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன.

சபை மண்டபத்திற்குள் சபாநாயகருக்கு வலப்புறமாக ஹென்சார்ட் அறிக்கையாளர்களுக்கென்று தனியான ஒரு பகுதியும், சபாநாயகருக்கு முன்னால் நேர் எதிரே படைக்கலச் சேவிதருக்கு இடது பக்கமாக அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் அதிகாரிகளுக்கான அமர்வுப் பகுதியும், வலப்புறமாக உரைபெயர்ப்பாளருக்கான பகுதியும் அமைக்கப்பட்டிருக்கின்றன.



பழைய நாடாளுமன்றக் கட்டடம்



அமைச்சர்களின் வரவேற்பறை



சபாநாயகர் கெலரிக்கான நுழைவாயிலுக்கு அருகில் உள்ள ஓவியமொன்று



வேலைப்பாடுகளுடனான மணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...கொண்ட நாடாளுமன்றம்



## செங்கோல்

நாடாளுமன்றத்தின் நிறைவேற்று அதிகாரத்தைக் குறிப்பதாக அமைவது 'செங்கோல்' ஆகும். இந்த செங்கோல் 1949 ஆம் ஆண்டு இங்கிலாந்து மக்கள் அவையால் இலங்கை மக்கள் பிரதிநிதிகள் சபைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டது. 1947 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சோல்பரி யாப்பின் பின்னர் ஏற்படுத்தப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் சபைக்கு பிரித்தானிய முடியின் அடையாளமாகவே இந்த செங்கோல் அறிமுகம் செய்யப்பட்டது. கறுப்பு நிறக் கைப்பிடியுடனான செங்கோலானது 18 கெரட் தங்கம், வெள்ளி, நீலக்கற்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற அமர்வு நடைபெறுகின்றபோது செங்கோல் படைக்கலச் சேவிதரால் சபைக்குள் கொண்டு வரப்பட்டு, சபை அமர்வு முடிந்தவுடன் சபைக்கு வெளியே கொண்டு செல்லப்படுகின்றது. சபை அமர்வு இல்லாத நேரங்களில் படைக்கலச் சேவிதரின் அறையில் இது வைக்கப்பட்டிருக்கும்.

## சபாநாயகரின் ஆசனம்

நாடாளுமன்ற அமர்வை தலைமை தாங்கி நடத்துபவர் சபாநாயகராவார். சபாநாயகரின் ஆசனமும் இங்கிலாந்தில் இருந்து அன்பளிப்பு செய்யப்பட்டதாகும். 200 வருடங்கள் பழைமை வாய்ந்த 'ஓக்' மரத்தினாலான இந்த ஆசனம், 6 அடி உயரத்தில் அழகிய சித்திர வேலைப்பாடுகள் கொண்டதாகும்.

## ஹென்சார்ட் அறிக்கை

நாடாளுமன்ற விவாதம் நடைபெறுகின்றபோது மக்கள் பிரதிநிதிகளான நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேசுகின்ற எல்லா விடயங்களும் பதிவு செய்யப்படும் அறிக்கைதான் 'ஹென்சார்ட் அறிக்கை' எனப்படுகின்றது. அத்துடன், ஜனாதிபதியால் நாடாளுமன்றத்திற்கு அனுப்பப்படும் அறிக்கைகள், சபாநாயகரின் அறிவித்தல்கள், நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களால் எழுப்பப்படுகின்ற கேள்விகள், அவற்றுக்கான பதில்கள் என்பனவும் இதில் அடங்கும். நாடாளுமன்ற அமர்வுகள் தொடர்பாக அறிந்துகொள்வதற்கான ஒரே மூலாதாரம் ஹென்சார்ட் அறிக்கையாகும். இந்தப் பணிகளுக்காக ஹென்சார்ட் ஆசிரியர் தலைமையிலான ஒரு பிரிவு நியமிக்கப்பட்டிருக்கின்றது.

## நாடாளுமன்றப் பதவிகள்

**சபாநாயகர்:**

ஜனாதிபதி, பிரதமர் என்போருக்கு அடுத்தபடியாக முக்கிய பதவியில் இருப்பவர் சபாநாயகர் ஆவார். சபை அமர்வுக்கு தலைமை தாங்கி சபையை நடத்துபவராக இவர் விளங்குகின்றார். புதிதாக நியமிக்கப்படுகின்ற நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வின் போது முதல் பணியாக அமைவது சபாநாயகர் ஒருவரைத் தெரிவு செய்வதாகும்.

**மக்கள் பிரதிநிதிகள்:**

ஒவ்வொரு 6 வருடங்களுக்கும் ஒருமுறை நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான பொதுத் தேர்தல் நடைபெறும். இன்றைய நிலையில் 196 உறுப்பினர்கள் பொதுத் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படுவர். மேலும், 29 பேர் தேசிய பட்டியல் ஊடாக தெரிவு செய்யப்பட்டு, மொத்தம் 225 உறுப்பினர்க்ள் நாடாளுமன்றத்தில் மக்கள் பிரதிநிதிகளாக அங்கம் வகிக்கின்றனர்.

**செயலாளர் நாயகம்:**

நாடாளுமன்ற செயலாளர் நாயகத்தின் பதவியானது 'முக்கியமானதும் மிகவும் பொறுப்பு வாய்ந்ததுமான பதவியாகும். நாடாளுமன்ற நடவடிக்கைகள், செயற்பாடுகள் தொடர்பாக முழுமையான அறிவும் பொறுப்பும் உடையவராக இவர் திகழ்வார். நாடாளுமன்ற அமர்வை மிகவும் திறம்பட நடத்துவதற்குரிய முழுப் பொறுப்பும் செயலாளர் நாயகத்தைச் சேர்ந்ததாகும். இங்கு பிரச்சினைகள், நெருக்கடிகள் எழுகின்றபோது சபாநாயகருடன் இணைந்து- அவருக்கு ஆலோசனை வழங்கி- அமர்வை ஒழுங்காக நடத்த உதவுபவரும் செயலாளர் நாயகம் ஆவார்.

**படைக்கலச் சேவிதர்:**


படைக்கலச் சேவிதர் பதவியும் முக்கிய பதவியாகும். இப்பதவியின் ஆரம்பமும் இங்கிலாந்து நாடாளுமன்ற வரலாற்றுடன் சம்பந்தப்பட்டதாகும். படைக்கலச் சேவிதர் நாடாளுமன்றத்தின் பாதுகாப்பு தொடர்பாகவும், குறிப்பாக நாடாளுமன்ற அமர்வு நடைபெறுகின்றபோது சபைக்குள் பாதுகாப்பு மற்றும் செங்கோலைப் பாதுகாப்பது உட்பட பல பொறுப்புக்களை நிறைவேற்றுகின்றார். நாடாளுமன்றத்திற்குள் அதிதிகளை அனுமதிப்பது, வைபவ ரீதியான நிகழ்வுகளைக் கண்காணிப்பது, பொதுமக்கள் கெலரியை கண்காணிப்பது என்பனவும் படைக்கலச் சேவிதரின் பொறுப்புக்களாகும்.

## நாடாளுமன்றத்தின் பொறுப்புக்கள்

நாடாளுமன்றத்தில் முக்கியமாக நிறைவேற்றப்படுவது நாட்டுக்குத் தேவையான சட்டங்களை (சட்டவாக்கம்) நிறைவேற்றுவதாகும். இந்நாட்டின் இறைமை, தன்னாதிக்கத்தைப் பாதுகாத்து அரசியல் யாப்புக்கமைவாக நாட்டை நிர்வகிப்பதற்குத் தேவையான சட்டங்களை இயற்றுவதே நாடாளும்ன்றத்தின் பிரதான பணியாகும்.

எந்தவொரு பிரேரணையும் சட்டமாவதற்கு முன்னர் நாடாளுமன்றத்தில் பரிசீலனை செய்யப்பட்டு, ஆழமாக விவாதிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டும். அத்துடன், பொது நிதியை கண்கணிப்பதுடன், வரவு-செலவுத்திட்டத்தை அங்கீகரிப்பதும் நாடாளுமன்றத்துக்குரிய பொறுப்புக்களாகும்.

## நாடாளுமன்ற சபை உள்ளமைப்பு









-அமீர் ஹுசைன்



...ளுடனான



சபை மண்டப நுழைவாயில்



செங்கோலை முன்னிலைப்படுத்தி ஜனாதிபதியின் வருகை



சபை மண்டபத்தின் எல்லை



சபாநாயகரின் ஆசனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அழகு அணில்

கூரை வீட்டில் கூடுகட்டி
கும்மாளம் போட்டு ஓடும்
குதித்துக் குதித்துத் தாவி ஆடி
கொய்யாப்பழம் தின்னும்!
முதுகில் மூன்று கோடிருக்கும்
இலவம் பஞ்சுபோல்
வாலிருக்கும்!
எலியைப் போல உணவு உண்ணும்
காய வைத்த நெல்லினையே
கணப்பொழுதில் தின்று ஓடும்-நாம்
கண்டிடாமல் இருந்துவிட்டால்
களிப்புடனே தின்று விடும்.
பஞ்சுபோல கூடு கட்டி
பாதுகாப்பாய் குட்டி போடும்
வாயினிலே அதனைக் கௌவி
வாஞ்சையோடு தாவி ஓடும்!

# விடாமுயற்சி வெற்றி தரும்

முயற்சியின் பலன் வெற்றியே! இது நாம் அனைவரும் அறிந்த உண்மை. கடின முயற்சியும் உழைப்பும் இன்றி எதையும் சாதிக்க முடியாது. பல வீரர்கள், பெரியார்கள் ஆரம்பத்தில் தோல்வியைக் கண்டபோதும் இறுதி வரை மனம் சோர்ந்து போகாது உழைத்ததால் வெற்றி கண்டு, தமக்கென ஓர் இடத்தை நிலைநாட்டி விட்டுச்சென்றுள்ளனர். மாவீரன் நெப்போலியன் போரில் தோல்வியுற்று வேதனைப்பட்டு பாழடைந்த ஒரு இடத்தில் இனி மீட்சியே இல்லை என்ற ஏக்கத்தில் இருந்தவேளையில், சிலந்தியொன்று வலை பின்னும் அற்புதக் காட்சியைக் கண்டான். அச்சிலந்தி தன் வலை அறுபட, அறுபட சோர்வின்றி தன் முயற்சியை கைவிடாது வலை பின்னிக் கொண்டே இருந்தது. ஒரு சாதாரண சிலந்திக்கு இத்தகைய முயற்சியா? இறுதியில் அது தனது முயற்சியில் வெற்றியும் கண்டுவிட்டதே! என வியந்து மீண்டும் போர் செய்யப் புறப்பட்டான். இறுதியில் அவன் வெற்றியடைந்து மாவீரன் நெப்போலியன் என சரித்திரத்தில் இடம் பெறவில்லையா?

உலகம் போற்றும் உத்தமர் காந்தி இரவு பகலாக அயராது நாட்டிற்கும் மக்களுக்கும் உழைத்தார். அதன் விளைவு பாரத நாட்டின் சுதந்திரம். ஆபிரகாம் லிங்கன் குடிசையில் பிறந்து, படிக்க விளக்கும் இன்றி, இரவல் புத்தகத்தில், அடுப்பு நெருப்பின் ஒளியில் கல்வி கற்றார். அதன் பயன்தான் வாழ்நாளில் கற்பனை செய்ய முடியாதளவுக்கு அவர் உயர்ந்தார். மாபெரும் மனிதனாக அமெரிக்க ஜனாதிபதியாக மிளிர்ந்தார். இதற்குக் காரணம் விடாமுயற்சியே!

தோமஸ் அல்வா எடிசன் நாள்தோறும் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டார். ஆய்வு கூட மேசையில் விஞ்ஞான நூல்களையே தலையணையாகப் பயன்படுத்தி நித்திரை செய்தார். இறுதியில் அவர் பலன் காணவில்லையா? ஒளியின்றி இருளடைந்திருந்த உலகிற்கு ஒளியைப் பெற்றுத் தரவில்லையா?

நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழைக்கும் உழவன் சோம்பேறியெனில் ஏனையோர் கதி என்னாவது? பட்டினியால் நாம் வாடாமல் அவர்களின் முயற்சியின் பலனாலேயே உயிர் வாழ்கிறோம் அல்லவா.



'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்' என்பது பழமொழி. எனவே, நாமும் எத்தகைய தோல்விகளைக் கண்டும் துவண்டு விடாது முயற்சி செய்து வெற்றியடைவோமாக.

முர்ஷிதா முபாரக், தரம் - 11D, பதுரியா ம.கல்., மாவனல்லை.





## விடுகதைகள்

1. பல அடுக்கு மாளிகையில்
இனிப்பு விருந்து. அது என்ன?
2. உடல் கொண்டு குத்திடுவான்;
உதிரிகளை ஒன்றிணைப்பான். அது என்ன?
3. பேசுவான் நடக்கமாட்டான்;
பாடுவான் ஆடமாட்டான். அவன் யார்?
4. தலை இல்லாதவன் தலையை சுமப்பான். அவன் யார்?
5. கூட்டுச்சேர்ந்து கோட்டை கட்டும்;
மாட்டுவோரை மடக்கித் தாக்கும். அது என்ன?
6. எண்ணெய் வேண்டா விளக்கு;
எடுப்பான் கைவிளக்கு. அது என்ன?
7. வித்தில்லாமல் விளையும்;
வெட்டாமல் சாயும். அது என்ன?


### விடைகள்

1. தேன் 2. ஊசி
3. வானொலிப் பெட்டி
4. தலையணை 5. தேனீ
6. மெழுகுவத்தி 7. வாழை

# தாகம் தணிக்கும் தண்ணீர் இனிப்பு

உடல் வறட்சியைத் தணித்து, உடலுக்கு நல்ல குளிர்ச்சியை அளிக்கும் பழம்-தர்ப்பூசணி.

இது 5000 ஆண்டுகளுக்கு முன்பே ஆபிரிக்க நாடுகளில் பயிர் செய்யப்பட்ட ஒரு பழைமையான பழம். தற்போது உலகெங்கும் பல நாடுகளில் தர்ப்பூசணி ஏராளமாக விளைகிறது.



ஆபிரிக்க நாடுகளின் பாலைவனப் பகுதிகளில் பயணம் செய்யும் மக்கள், தங்கள் தாகத்தைத் தணிக்க தர்ப்பூசணியை தம்முடன் எடுத்துச் சென்றனர். இதனால்தான் இப்பழம் ஆபிரிக்காவிலிருந்து ஏனைய பகுதிகளுக்கும் பரவியது.

இப்பழம் சீனா, ஜப்பான் நாடுகளில் 10 ஆம் நூற்றாண்டில் பயிரிடப்பட்டது. இதனை ஜப்பானியர்கள் 'தண்ணீர் இனிப்பு' என்றும் அழைக்கின்றனர். அந்தவகையில், அமெரிக்காவில் ஒவ்வொரு ஆண்டும் கோடை காலத்தில் தர்ப்பூசணி விழாவை நடத்துகின்றனர். அத்துடன், இது விளையும் காலத்தில் இதனை காட்சிக்கும் வைப்பர்.

இத்தர்ப்பூசணியானது ஆற்றுப்படுகைகளில் அல்லது மணற்பரப்புள்ள பகுதிகளில் பயிராகி ஐந்து மாதங்களில் அறுவடைக்குத் தயாராகின்றது. தர்ப்பூசணிக் காய்கள் முதிர்ச்சி அடையும் நேரத்தில் அதிகமான வெப்பநிலை நிலவினால் பழங்களின் இனிப்புத்தன்மையும் அதிகரிக்கும்.

இப்பழத்தில் 'பெக்டீன்' எனும் சத்து அடங்கியுள்ளது. இது கொலஸ்ட்ரோலைக் கரைக்கும். அத்துடன், தண்ணீர் வறட்சி நோயைக் கட்டுப்படுத்த ஆயுர்வேத மருத்துவத்தில் தர்ப்பூசணி பயன்படுகிறது.

தர்ப்பூசணி பழ விதையில் 34 சதவீத எண்ணெய் சத்து உள்ளது. தர்ப்பூசணி பழ விதையை பொரித்தோ அல்லது வறுத்தோ சாப்பிட்டால் இரத்த அழுத்தம் குறையும்.

இதன் கொடியின் இலை கசப்புத் தன்மை உடையது. இதன் இலைச்சாற்றை இரத்த சோகை நோய்க்கும் நெருப்புக் காய்ச்சலுக்கும் பயன்படுத்துவார்கள்.



தர்ப்பூசணிப் பழத்தின் சிவந்த சதைப்பகுதியை மட்டும் சாப்பிட்டுவிட்டு மீதியை எறிந்துவிடாமல் தோலோடு ஒட்டியுள்ள வெண்மையான பகுதியையும் சேர்த்து சாப்பிடுவது அதிக பலனைக் கொடுக்கும்.

வி.தனுஷிகா குமாரி,
க/அம்பாக்கோட்டை த.வித்., கெங்கல்ல.



# இளைஞனின் நீதி

ஒரு முதியவரும் ஓர் இளைஞனும் ஒன்றாக நடந்து சென்றார்கள். அப்போது பணப்பை ஒன்று கீழே கிடப்பதைக் கண்டார்கள். அதை எடுத்துக்கொண்ட அந்த இளைஞன், "கடவுள் எனக்காக இதை அனுப்பியிருக்கிறார்" என்றான்.

உடனே முதியவர் "நாம் இதைப் பகிர்ந்து கொள்வோம்" என கூறினார்.

"முடியாது. நாம் இருவரும் சேர்ந்து அதை எடுக்கவில்லை. நான்தான் அதை எடுத்தேன். அது எனக்குத்தான் சொந்தம்" என்று இளைஞன் கூறினான். முதியவர் எதுவும் பேசவில்லை.



அவர்கள் மேலும் சிறிது தூரம் நடந்து சென்றார்கள். திடீரென பொலிஸார் சிலர் பின் தொடர்ந்து வருவதையும் கத்துவதையும் கேட்டார்கள். அவர்கள் இவர்களின் அருகே வந்ததும், "பணப்பையைத் திருடியது யார்?" என்று கேட்டனர். இளைஞன் நடுக்கமுற்று முதியவரைப் பார்த்து, "முதியவரே! நாம் கண்டெடுத்த இந்தப் பணப்பைக்காக பொலிஸார் நமக்குத் துன்பமிகு தண்டனைத் தருவார்கள் என பயப்படுகிறேன்" என்று கூறினான். "அது உன்னுடைய பணப்பை, அது நம்முடைய பணப்பை அன்று. உனக்குத்தான் உன்னுடைய துன்பம், அது நம்முடையது அன்று" என முதியவர் கூறினார்.

உடனே பொலிஸார் அந்த இளைஞனைப் பிடித்துக்கொண்டு சென்றனர். முதியவர் தன் வழியே பயணத்தைத் தொடர்ந்தார்.

அய்மா நிஃமத்துல்லா,
கமு/அல்-ஹம்றா வித்.,
மருதமுனை.

## அறிவு தீபம்

நீரைக் காய்ச்சி குடித்திடுவோம்!
நிதமும் நன்றாய் படித்திடுவோம்!
கீரை காய்கறி சாப்பிடுவோம்.
கிடைக்கும் நலம்பல பெற்றிடுவோம்!
ஊருடன் ஒத்து வாழ்ந்திடுவோம்
உள்ளத் தூய்மை வளர்த்திடுவோம்!
ஊறுகள் எதுவும் நேராமல்
உடல் நலந்தனைக் காத்திடுவோம்!
ஆற்றைப்போல ஓடிடுவோம்
அழகாய் ஆடிப் பாடிடுவோம்!
ஆற்றல் மனத்தைப் போற்றிடுவோம்
அறிவெனும் தீபம் ஏற்றிடுவோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அபிலாஸ், அரவிந்த், மயூரி மூவரும் தம் நண்பர்களை இணைத்துக்கொண்டு சிறுவர் கழகம் அமைத்து அதன்மூலம் சிறுவர்களின் உரிமைகள் பற்றி மூத்தோருக்கு அறிவூட்டிய விடயங்கள் பற்றிய கட்டுரை கடந்தவார விஜய்யில் வெளியாகி இருந்தது.**

# மது ஒழிப்பு போராட்டம்





இந்த நண்பர்களின் தந்தைமாரின் மதுபானப் பழக்கத்தை ஒழிக்கும் போரை அபிலாஸ் அவனுடைய வீட்டில் இருந்தே ஆரம்பித்தான். அவனது செயலை நண்பர்கள் பாராட்டியதோடு மகிழ்ந்தனர். அபிலாஸின் தந்தை மதுபானத்தால் ஏற்படும் விபரீதத்தைத் புரிந்துகொண்டதோடு, அவனின் செயற்பாடுகளுக்கும் உதவ முன்வந்தார்.

அத்துடன், சிறுவர்களுடன் அவரும் சேர்ந்து வீடு வீடாகச் சென்றார். மதுபானம் அருந்தும் தந்தைமாரைச் சந்தித்து அதன் மோசமான விளைவுகளைப் பற்றி எடுத்துக் கூறினார்.

''நீங்கள் எனக்கு அதுபற்றிப் பாடம் புகட்ட வரவேண்டாம். உங்கள் வேலையைப் பாருங்கள்'' என்று கமலின் தந்தை கூறினார்.

''அப்படியல்ல. நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து இந்த நல்ல வேலைக்கு ஒத்துழைக்க முன்வர வேண்டும்'' என்று அபிலாஸின் தந்தை வேண்டினார்.

''இல்லை, இல்லை. நான் எனது குழந்தைகளின் தேவைகளை நல்ல முறையில் பூர்த்தி செய்கிறேன். அதுபற்றிக் கற்பிக்க நீங்கள் வரவேண்டாம். நாங்கள் அதைப் பார்த்துக்கொள்கிறோம்'' என்று கமலின் தந்தை கூறினார்.

இவ்வாறாக சிறுவர்களும் நண்பர்களும் அவர்களுடன் அபிலாஸின் தந்தையும் சேர்ந்து மதுபானப் பாவனையைத் தடுக்க பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டனர். மதுப்பிரியர்களுடன் அதன் பாதிப்புக்கள் பற்றிக் கூறும்போதும் பேசும் போதும் பல முரண்பாடுகளும் ஏற்பட்டன.

இதனால், ஊர் மதகுருமார்களும் பாடசாலை அதிபரும் இவர்களுடன் இணைந்து கொண்டதையடுத்து ஓரளவுக்கு முரண்பாடுகள் குறைந்தன.

ஊரில் உள்ள சட்டவிரோத மதுபானம் வடிக்கும் முதலாளியால்தான் குடிகாரர்கள் உருவாவதாக ஊரார் சுட்டிக்காட்டினர். ''இந்த சட்டவிரோத செயலை செய்யும் அனைவரையும் பிடித்துக் கொடுக்கவேண்டும்'' என்று மதகுரு கூறினார்.

''இனி நாம் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. இந்த மோசமான செயல் நடைபெறும் இடத்திற்குச் செல்வோம். எல்லாவற்றையும் நாசப்படுத்துவோம். பொலிஸிலும் முறைப்பாடு செய்வோம். அப்போது பொலிஸார் அவர்களைப் பிடிப்பார்கள்தானே?'' என்று ஊர் பெரியவர்கள் உற்சாகப்படுத்தினார்கள்.

''நல்லது. நாம் அப்போது நாளை அந்த இடத்திற்குப் போவோம்'' என்று கல்லூரியின் தலைமை ஆசிரியர் கூறினார்.

அதன்பின்னர் எல்லோரும் தயாராகினர். மறுநாள் காலையில் ஊர் பொது இடத்தில் கூடினர். அவர்களில் நீண்ட காலமாக மதுவுக்கு அடிமையானவர்களும் இருந்தனர்.

''நான் அந்த இடங்களைக் காட்டுவேன்'' என்று வந்திருந்தவர்களில் ஒரு குடிகாரர் கூறினார்.

அப்போது மதகுருவும் கல்லூரியின் தலைமை ஆசிரியரும், ''சரி இப்போது நாம் தயாராவோமா பிள்ளைகளே! நீங்கள் முன்னே போங்கள்''

அபிலாஸ், அரவிந்த், மயூரி மற்றும் நண்பர்கள் பதாதைகள் சகிதம் முன்னே நடந்தார்கள்.



சட்டவிரோத மதுபானம் வடிக்கும் இடத்தை அண்மித்ததும் பிள்ளைகளை தொலைவுக்குப் போகுமாறு மதகுரு கூறினார். பெரியவர்கள் முன்னே போகுமாறும் கூறினார்.

அங்கு இவர்கள் சென்றபோது, மதுபானம் வடிக்கப் பயன்பட்ட பாத்திரங்கள், உபகரணங்களை ஆங்காங்கே போட்டுவிட்டு அதில் ஈடுபட்டவர்கள் தப்பியோடினார்கள். அங்கு சென்றவர்கள் அவற்றை தீயிட்டுக் கொளுத்தினர்.

''இத்தொழில் புரிபவர்களை எமக்குத் தெரியும்'' என்று பலரும் கூறினர். இவ்வாறு நடந்து முடிந்ததாயினும் மீண்டும் இரண்டு வாரங்கள் செல்கையில் சிலர் மெல்ல மெல்ல மது அருந்துவதில் ஈடுபட்டனர். எனினும், நீண்டகாலம் செல்ல முன்னர் பொலிஸார் தலையிட்டு அனைவரையும் மடக்கிப் பிடித்தனர். இறுதியில் எமது குழந்தைகள் வெற்றி பெற்றனர்.

இனி சிறுவர் உரிமைகளுக்கும் சுதந்திரங்களுக்கும் பெரியவர்களாலும் பெற்றோர்களாலும் குந்தகம் ஏற்படாது என்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

**மதுபான பாவனையைத் தடுக்க சிறுவர்களும் நண்பர்களும் அபிலாஸின் தந்தையும் இணைந்து பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டனர். பாதிப்புக்கள் பற்றி விளக்கும்போது பலருடன் முரண்பாடுகள் ஏற்பட்டன. மதகுருமார்களும் பாடசாலை அதிபரும் இவர்களுடன் இணைந்து கொண்டதையடுத்து முரண்பாடுகள் ஓரளவுகுக் குறைந்தன**

## துஷ்பிரயோகத்தில் இருந்து தற்காத்துக் கொள்ளுங்கள்

**சிறுவர்களை பல்வேறு விதமான பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு சிலர் உட்படுத்துகின்றனர். சில சந்தர்ப்பங்களில் நீங்கள் இவை பற்றி அறியாமல் இருக்கலாம். உங்கள் தாய், தந்தையர் அன்புக்காக உங்கள் தலையைத் தடவுவது உங்களுக்கு ஞாபகம் இருக்கும். இவ்வாறு இல்லாமல் எவராவது வித்தியாசமான முறையில் உங்கள் தலையை அல்லது உடம்பில் ஏதாவது பாகத்தை தடவினால் அல்லது பிடித்தால் அல்லது உங்களுக்குத் தெரியாத ஒன்றை செய்யுமாறு சொன்னால் உடனடியாக பெரியவர்களிடம் இது பற்றிச் சொல்லிவிடுங்கள். அத்தோடு, அப்படிப்பட்டவர்களிடம் இருந்து தப்பித்துக்கொள்ளுங்கள். மோசமான விரும்பத்தகாத எதையாவது செய்யுமாறு பணித்தால் அல்லது வற்புறுத்தினால் உங்களுக்குத் தெரிந்தவர்களிடம் அல்லது பெரியவர்களிடம் தயக்கமின்றிக் கூறிவிடுங்கள். அத்துடன், அறிமுகமில்லாத எவராவது உங்களுக்கு உண்ணப், பருக எதையாவது எவராவது தந்தால் வாங்கவேண்டாம். அப்படிப்பட்டவர்கள் உங்களை அழைத்தால் அருகில் செல்லவும் வேண்டாம்.**

(ஆ)

## விஜய் மாணவர் கழகம்



அங்.இல: 3505

எஸ்.கிஷாந்தனி, பாலர் வகுப்பு, சென்.மேரிஸ் கல்., மட்டக்குளிய.



அங்.இல: 3506

எச்.ரைஸா, தரம் - 4A, தில்லையடி மு.ம.வித்., புத்தளம்.



அங்.இல: 3507

சோ.பிரகலாதன், தரம் - 8, யாழ்.இந்துக் கல்., யாழ்ப்பாணம்.



அங்.இல: 3508

அ.அருட்சுதன், தரம் - 11, புனித கொன்றி அரசர் கல்., மாதகல்.



அங்.இல: 3509

எஃப்.டனுஷன், தரம் - 4A, புனித ஆனாள் ம.ம.வித்., மன்னார்.



அங்.இல: 3510

எஃப்.இஷ்பா, தரம் - 6B, அறபா தே.பாட., வெலிகம.



அங்.இல: 3511

ம.சஞ்சீவன், தரம் - 10, யா/யூனியன் கல்., தெல்லிப்பளை.



அங்.இல: 3512

கீர்த்திகா, தரம் - 7, இ.ம.ம.வித்., வவுனியா.



அங்.இல: 3513

எம்.சப்றாஸ், தரம் - 9A, மட்/அந்நூர் தே.கல்., வாழைச்சேனை-04.



அங்.இல: 3514

யோ.விதுஷன், தரம் - 7, யா/கொ.இ.கல்., கொக்குவில்.



அங்.இல: 3515

ஆர்.லக்ஸ்மன், தரம் - 11, பூவரசங்குளம் ம.கல்., வவுனியா.



அங்.இல: 3516

எம்.நிப்ராஸ், தரம் - 11, மன்பஉல் ஹுதா அ.கல்., ஓட்டமாவடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சாரணியத்தின் தந்தை பேடன் பவல் தினத்தை முன்னிட்டு சம்மாந்துறை அல்-மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற குருளைச் சாரணிய பாசறைக்கு வருகை தந்த அதிதிகளையும் குருளைச் சாரணியர்கள் புத்தாக்க வாத்தியக் கருவிகளுடன் நிற்பதனையுமே படத்தில் காண்கின்றீர்கள்.

(படமும் தகவலும் : நிப்றாஸ் மன்சூர்-கல்முனை)

விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு



பதுளை-மயிலகஸ்தென்னையைச் சேர்ந்த ரமேஷ்குமார்-ரதி தம்பதியரின் செல்வப் புதல்வன் திவ்ய வர்ஷந்த், 19.03.2010 அன்று தனது பதினொராவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் அனைவரும் நீடூழி வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல் : திலக்ஷனா)



பதுளை-மயிலகஸ்தென்னையைச் சேர்ந்த ரமேஷ்குமார்-ரதி தம்பதியரின் செல்வப் புதல்வி விதுர்ஷ வர்ஷா, 28.03.2010 அன்று தனது ஆறாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் அனைவரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.



எஹலியகொடையைச் சேர்ந்த அக்ரம்-சில்மியா தம்பதியரின் அன்பு மகன் மொஹம்மட் அம்னாஸ், 31.03.2010 அன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

# மாதம் ஒரு தலைப்பிலான உங்கள் கைவண்ணங்கள்

## சித்திரைப் புத்தாண்டு



அ.துசாந்தினி, தரம் - 11B,
டயகம கிழக்கு த.வித்.,
டயகம.



எஃப்.நுஸ்கானா, தரம் - 10A,
அ/நாச்சியாதீவு மு.ம.வித்.,
அநுராதபுரம்.

## கார்ட்டூன் கதாபாத்திரம்



சி.சுதர்ஷனி, தரம் - 6B,
கே/தெஹியோவிட்ட த.ம.வித்.,
தெஹியோவிட்ட.



ரினோஸா பர்வின்,
தரம் - 8G, அல்-அஸ்ஹர் ம.கல்.,
கண்டி.

## கார்



என்.சிரோன், தரம் - 5,
வட்டகொட த.ம.வித்.,
வட்டகொட.



சல்மான் நவ்ஷாட்,
தரம் - 3A, விந்தியார்த வித்.,
கண்டி.

## ஆடும் குட்டியும்




எம்.எஸ்.சம்ரூத், தரம் - 11A,
கு/பறகஹதெனிய தே.பாட.,
பறகஹதெனிய.



ஸீனுல் அறஃபா, தரம் - 9,
கரகொட மு.ம.வித்., கரகொட.

## வண்ணத்துப் பூச்சி



வி.வினோஜா, தரம் - 5,
நு/சென்.கூம்ஸ் ம.வித்.,
நுவரெலியா.



யூனுஸ் உமர், தரம் - 2B,
பிரிலியன்ட் ஸ்டார் ச.பாட.,
திக்குவல்லை.

## தாமரைக் குளம்



ம.நிதர்சன், தரம் - 7,
யா/கொக்குவில் இ.கல்.,
கொக்குவில்.



சஹ்லா நிஸாம்,
தரம் - 8B, அஸ்ஹர் கல்.,
அக்குறணை




## கைவண்ணங்கள் த.பெ.எண் 2037 கொழும்பு




ஜோயல் நிரூசன்,
தரம் - 2,
மன்/பரிகாரிகண்டல்
அ.த.க.பாட.,
முருங்கன்.



க.சுதர்ஷன்,
தரம் - 8A,
தமிழ் மத்திய ம.வித்.,
வவுனியா.



எஃப்.சல்மா,
தரம் - 2BT,
ஃபாத்திமா மு.பா.ம.வித்.,
கெலிஓய.



சிஹ்னாஸ் பானு,
தரம் - 10,
முஸ்லிம் ம.ம.வித்.,
சம்மாந்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அபூர்வ குதிரையைப் பரிசாகப் பெற...



"ஓ, எவ்வளவு நீண்ட தூக்கம் போட்டுவிட்டேன்"

"நாங்கள் இல்லாதிருந்தால் நீ அப்படியே தூங்கியிருப்பாய். இப்போது எங்களுடைய விருந்தினனாக வா" என்று அவனது மைத்துனர்கள் பதிலளித்தனர்.

"முடியாது. மைத்துனர்களே, நான் மாரியா மரெவ்னாவைத் தேடிப் போயாகவேண்டும்"

அவன் உடன் புறப்பட்டுச் சென்று, மாரியா மரெவ்னாவைக் கண்டுபிடித்து அவளிடம் கூறினான்; "மரணமற்ற கஷேயிடம் அத்தகைய அருமையான குதிரையை அவன் எங்கிருந்து பெற்றான் என்பதைக் கேள்" எனக் கூறினான்.

மாரியா மரெவ்னா சமயம் பார்த்து மரணமற்ற கஷேயிடம் அவனது குதிரை பற்றிக் கேட்டாள். கஷேய் சொன்னான்;

"ஏழு கடல்களும் ஏழு மலைகளும் தாண்டியுள்ள ஒரு நாட்டில், நெருப்பாற்றுக்கு அப்பால் ஒரு காட்டில் சூனியக்காரி பாபா-யகா வாழ்கிறாள். அவளிடம், நாள்தோறும் உலகம் முழுவதையும் சுற்றிச் சவாரி செய்யக்கூடிய பெண் குதிரை ஒன்று உள்ளது. மூன்று நாட்கள் அவற்றை நான் மேய விட்டுக் கவனத்துடன் பார்த்துக்கொண்டேன். அப்பெண் குதிரையை ஓடிப்போக விடவில்லை. ஆகவே, எனது சேவைக்குப் பரிசாக ஆண் குதிரைக்குட்டி ஒன்றை பாபா-யகா எனக்குத் தந்தாள்"

"நெருப்பாற்றை உன்னால் எப்படித் தாண்ட முடிந்தது?"

"என்னிடம் மந்திரக் கைக்குட்டை ஒன்று இருக்கிறது. எனது வலப்பக்கத்தில் இருந்து மூன்று முறை அழைக்கிறபோது, மிக உயரமான பாலம் ஒன்று அங்கு எழும். அதைச் சுவாலையால் தொடமுடியாது"

மரணமற்ற கஷேயிடம் கேட்ட ஒவ்வொரு வார்த்தைகளையும் மாரியா மரெவ்னா இளவரசன் இவானுக்குத் தெரியப்படுத்தினாள். மந்திரக் கைக்குட்டையை எடுத்து அவனிடம் கொடுத்தாள்.

அதன்மூலம் நெருப்பாற்றைக் கடந்த இளவரசன் இவான் பாபா-யகாவினுடைய வீடு நோக்கிச் சென்றான். உணவுகூட உண்ணாமல் நீண்ட தூரம் நடந்தான்.

அப்போது விநோதப் பறவை ஒன்றையும் அதன் குஞ்சுகளையும் சந்தித்தான்.

"இந்தக் குஞ்சுகளில் ஒன்றை நான் உண்ணப் போகிறேன்" இளவரசன் இவான் கூறினான்;

என் குஞ்சுகளைத் தொடாதே, இளவரசன் இவான். என்றவாறு ஒருநாள் நான் உனக்கு உதவி செய்வேன்" என்று பறவை கெஞ்சியது. இளவரசன் இவான் மேலும் நடந்தான். அப்போது காட்டில் ஒரு தேன்கூட்டைப் பார்த்தான். "இதில் உள்ள தேன் எல்லாவற்றையும் எடுக்கப் போகிறேன்" என்றான் இவான். ராணித் தேனீ அவனிடம் கெஞ்சிக் கூறியது;

"எனது தேனைத் தொடாதே, இளவரசன் இவான். என்றாவது ஒருநாள் நான் உனக்கு உதவி செய்வேன்" என்றது.

இளவரசன் இவான் தேனைத் தொடாது மேலும் நடந்தான்.

அப்போது அவன் ஒரு சிங்கமும் அதன் குட்டிகளும் உள்ள இடத்துக்கு வந்து சேர்ந்தான்.

"இந்த சிங்கக் குட்டியை நான் உண்ணப்போகிறேன். எனக்கு மிகுந்த பசியாக இருக்கிறது. என்னால் நிற்கக்கூட முடியவில்லை"

"எனது குட்டிகளைத் தொடாதே இளவரசன் இவான். ஒருநாள் நானும் உனக்கு உதவி செய்வேன்" என்று சிங்கம் கெஞ்சியது.

"நல்லது, நீ சொன்னபடியே நடக்கட்டும்" என்று கூறி அவன் பசியோடு போய்க்கொண்டிருந்தான். இறுதியில் பாபா-யகாவினுடைய வீட்டை அடைந்தான். வீட்டைச் சுற்றிலும் பன்னிரண்டு கம்பங்கள் இருந்தன. அவற்றில் பதினொன்றில் மனிதத் தலைகள் வைக்கப்பட்டிருந்தன.

"வணக்கம், பாட்டி!" என்றான் இளவரசன் இவான்.

"வணக்கம், இளவரசன் இவான். என்ன காரியமாக இங்கே வந்திருக்கிறாய்? விருப்பத்தின் பேரில் வந்தாயா அல்லது தேவையின் பேரில் வந்தாயா? .

"உனக்குச் சேவை செய்து உனது அருமையான குதிரைகளில் ஒன்றைப் பரிசாகப் பெற வந்திருக்கின்றேன்"

"நல்லது, இளவரசன் இவான். மூன்று நாட்கள் நீ எனக்குச் சேவை செய்யவேண்டும். எனது பெண் குதிரைகளைப் பத்திரமாகப் பாதுகாத்தால் எனது அருமையான குதிரைகளில் ஒன்றை உனக்குத் தருவேன். அவ்வாறு நீ செய்யவில்லை என்றால் பன்னிரண்டாவது கம்பத்தில் உனது தலை தொங்கவிடப்படும். நீயே இதற்குப் பொறுப்பாவாய்" என்றாள் பாபா-யகா.

இளவரசன் இவான் இதற்கு ஒப்புக்கொண்டான். பாபா-யகா அவனுக்கு உண்ணவும் குடிக்கவும் கொடுத்து வேலையும் கொடுத்தாள்.

இளவரசன் இவான் பெண் குதிரைகளை மேய்ச்சல் நிலத்திற்கு ஓட்டிச்சென்றான். அப்போது அவை வால்களை உயர்த்திக்கொண்டு மேய்ச்சல் நிலத்தின் ஊடாக எல்லாவழிகளிலும் பாய்ந்தோடின. அவை எங்கே போகின்றன என்று பார்ப்பதற்கு முன்பாகவே அவை பார்வையில் இருந்து மறைந்துவிட்டன. இதனால், இளவரசன் இவான் மிகுந்த துயரம் அடைந்தான். வேதனை தங்காது ஒரு கல்லின் மீது அமர்ந்து தூங்கிப்போய் விட்டான்.

(தொடரும்....)

# பலநாள் திருடன்


சுந்தரபுரி மிகவும் அழகான ஊர். அங்கே ஒரு பழைமையான கோயில் இருந்தது. அந்தக் கோயில் வாசலில் பிள்ளைகள் விளையாடுவர். மாலை நேரங்களில் சிறுவர், சிறுமியர் கூட்டம் சூழ்ந்து இருக்கும். அந்த கோவில் வாசலில் கட்டி இருக்கும் மணி அடிக்கும் சத்தம் முழு ஊருக்குமே கேட்கும். கோவில் மணியைச் சில பிள்ளைகள் விளையாட்டாகவும் அடித்து ஒலி எழுப்புவார்கள். அந்த ஒலி அவர்களுக்கு அளவில்லாத மகிழ்ச்சியை அளிக்கும். கோவிலைப் போலவே அந்த மணியும் பழைமையானது.

ஒருநாள் அந்த மணியைக் காணவில்லை. அதனால், அனைவரும் வருந்தினர். எங்கள் தாத்தா காலத்தில் இருந்து இந்த மணி இருந்ததே... எங்கே போய் இருக்கும்? எப்படிப் போய் இருக்கும்? என்று ஊரில் உள்ள பெரியவர்கள் அனைவரும் வருத்தத்தோடு பேசிக் கொண்டனர். சிறுபிள்ளைகளின் மனமும் வாடிப் போனது. மாலையில் கோவில் வாசலில் விளையாடும் பிள்ளைகள் சில நிமிடமாவது மணிச் சத்தம் கேட்டு மகிழ்வார்கள். இப்போது அந்த மகிழ்ச்சிக்கும் வழி இல்லை. இதனால், அவர்கள் மிகவும் வருந்தினார்கள்.

கிரி என்ற சிறுவன் கோவில் மணி மீது மிகவும் ஆசை வைத்திருந்தான். அதைக் காணவில்லை என்றதும் அவனை பெரும் துயரம் வாட்டியது. உணவே உண்ணப் பிடிக்கவில்லை. அவனின் தாயும் தந்தையும் அவனுக்கு எவ்வளவோ ஆறுதல் சொன்னார்கள். ஆனால், அவன் நீண்ட நாட்களாக மணியைப் பற்றி யோசித்துக் கொண்டே இருந்தான். மணியைக் கண்டுபிடிப்பதற்கு ஊர் பெரியவர்கள் எவ்வளவோ முயற்சி எடுத்துக் கொண்டனர். ஆனால், முடியவில்லை. காலப்போக்கில் பிள்ளைகளும் கொஞ்சம் கொஞ்சமாக மணியை மறந்துவிட்டனர். ஆனால். கிரியால் மட்டும் கோவில் மணியை மறக்க முடியவில்லை. தினமும் அது அவன் மனதில் ஒலித்துக் கொண்டே இருந்தது. மீண்டும் மணியைப் பார்க்க மாட்டோமா என்று ஏக்கத்தோடு இருந்தான்.

ஓர் ஆண்டு ஆகிவிட்டது. அனைவரும் கோவில் மணியை அடியோடு மறந்துவிட்டனர். ஆனால், கிரி மட்டும் விடாமுயற்சியோடு கோவில் மணியைத் தேடிக் கொண்டு இருந்தான். அந்த ஊரில் ஒரு செல்வந்தர் குடும்பம் மிகவும் ஆடம்பரமாக வாழ்ந்து வந்தது. அவர்களது ஆடம்பரத்தை ஊரே அதிசயமாக வேடிக்கை பார்க்கும். அதில் அவர்களுக்கு பெருமையும் கூட. அவர்கள் வீட்டுப்பையன் சந்துரு. கிரியின் வகுப்பில் படித்தான்.

ஒரு நாள் சந்துரு பாடசாலைக்கு வரவில்லை. அவனைத் தேடிக் கொண்டு அவன் வீட்டுக்குப் போனான் கிரி. அங்கிருந்த அறையின் உள்ளே சந்துருவைப் பார்ப்பதற்காக நுழைந்தான். அங்கே இருந்த சந்துருவின் தந்தை கிரியை விரட்டினார். அப்போது அந்த வீட்டின் ஒரு மூலையில் இருந்த மணியை கிரியின் கண்கள் கண்டு



விட்டன. 'அடடா! இது கோவில் மணி அல்லவா!' என்ற எண்ணம் அவன் மனத்தில் தோன்றியது. உடனே கிரி ஊர் பெரியவர் வீட்டுக்கு ஓடினான். உண்மையைச் சொன்னான். ஊர்ப்பெரியவர் சந்துருவின் வீட்டுக்கு கிரியுடன் போனார். அவரை வீட்டுக்குள் நுழைய விடாமல் ஏதேதோ பேசித் தடுத்தார் சந்துருவின் அப்பா. ஊர்ப் பெரியவர் பிடிவாதமாக உள்ளே நுழைந்து பார்த்தார். அங்கே கோவில் மணி இருந்தது. பலநாள் திருடன் ஒருநாள் பிடிபடுவான்! என்ற பழமொழி உண்மை ஆகிவிட்டது. இப்படி பல பொருட்களைத் திருடி விற்று ஆடம்பரமாக அவர்கள் வாழ்வது புரிந்து போனது. ஊரார் அவர்களைப் பிடித்துத் தண்டித்தனர். கிரியின் விடா முயற்சியை ஊரார் அனைவரும் பாராட்டினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන්
# ஆயுபோவன்
# வணக்கம்

இன்றைய பாடத்தில் கமலுக்கும் அனிலுக்கும் இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

කමල්: අනිල් සවස මොනවද කරන්නේ?
அனில் சவச மொனவத கறன்னே?
கமல்: அனில் பின்னேரம் என்ன செய்கின்றாய்?

අනිල්: ඇයි කමල්? මොනවා හරි වැඩක් තියෙනවාද?
எய் கமல்? மொனவ ஹரி வெடக் தியெனவாத?
அனில்: ஏன் கமல்? ஏதாவது வேலை இருக்கின்றதா?

කමල්: නැහැ අනිල්. අද සවස චිත්‍රපටියක් බලන්න යමුද?
நெஹெ அனில். அத சவச சித்ரபடியக் பலன்ன யமுத?
கமல்: இல்லை அனில். பின்னேரம் திரைப்படம் ஒன்று பார்க்கப் போவோமா?

අනිල්: යමු. හුඟ කාලෙකින් චිත්‍රපටියක් බලන්න ගියේ නැහැ.
யமு. ஹுங்க காலெகின் சித்ரபடியக் பலன்ன கியே நெஹெ.
அனில்: போவோம். நீண்ட நாட்களாக திரைப்படம் ஒன்று பார்க்கப் போகவில்லை.

ඉතින් අපි මොකද්ද බලන්න යන්නේ?
இதின் அபி மொகத்த பலன்ன யன்னே?
இனி நாம் எந்த திரைப்படத்தை பார்க்கப் போவது?

කමල්: රීගල් සිනමාහලේ හොඳ චිත්‍රපටියක් තියෙනවා. ඒක බලන්න යමු.
ரீகல் சினிமாஹலே ஹொந்த சித்ரபடியக் தியெனவா.
ஏக பலன்ன யமு.
கமல்: ரீகல் திரையரங்கில் நல்லதொரு திரைப்படம் இருக்கிறது. அதை பார்க்கப் போவோம்.

අනිල්: හා හොඳයි. ඒක පටන්ගන්නේ කීයටද?
ஹா ஹொந்தய். ஏக படன்கன்னே கீயடத?
அனில்: ஹா நல்லது. எத்தனை மணிக்கு அது தொடங்குகிறது?

කමල්: සවස හයට පටන්ගන්නවා. ඔයා මල්ලිවත් එක්කගෙන අපේ ගෙදර එන්න.
சவச ஹயட படன்கன்னவா. ஒயா மல்லிவத் எக்ககென அபே கெதற என்ன.
கமல்: மாலை ஆறு மணிக்கு தொடங்குகிறது. நீங்கள் தம்பியையும் அழைத்துக்கொண்டு எங்கள் வீட்டுக்கு வாருங்கள்.

අනිල්: හොඳයි. මම සවස පහයි තිහට විතර ඔයාලගේ ගෙදර එන්නම්.
ஹொந்தய். மம சவச பஹய் திஹட விதற ஒயாலகே கெதற என்னம்.
அனில்: நல்லது. நான் ஐந்து முப்பது அளவில் உங்கள் வீட்டுக்கு வருகிறேன்.

## பயிற்சி

கீறிட்ட இடங்களை நிரப்புக.

1. ..................... මොනවාද කරන්නේ?
2. සවස .......බලන්න යමු.
3. ........එකට යමු.
4. සවස ............. පටන් ගන්නවා.
5. ඔයාලගේ........... එන්නම්.






**He, She, It** முதலான பிரதிப் பெயர்ச்சொற்களை (Pronouns) எழுவாய் பகுதியில் கையாண்டு அமைக்கப்பட்ட, இறந்தகால தனி வாக்கியம் மற்றும் நிகழ்கால தனி வாக்கியம் ஆகிய இரண்டு வகை வாக்கியங்களிலும் காணப்படுகின்ற, எதிர்மறை நிலையில் உள்ள (Negative) வாக்கியங்களை இங்கே ஒப்பிட்டுப் பயில்வோம்.

| Past Simple Tense<br>இறந்தகால தனி வாக்கியம் | Present Simple Tense<br>நிகழ்கால தனி வாக்கியம் |
|---|---|
| (அ) He did not go.<br>அவன் போகவில்லை. | (ஆ) He does not go.<br>அவன் போவதில்லை. |
| (இ) She did not travel.<br>அவள் பயணிக்கவில்லை. | (ஈ) She does not travel.<br>அவள் பயணிப்பதில்லை. |
| (உ) It did not drink.<br>அது குடிக்கவில்லை. | (ஊ) It does not drink.<br>அது குடிப்பதில்லை. |

(அ) He did not go to the market yesterday.
அவன் நேற்று சந்தைக்குச் செல்லவில்லை.
(இறந்தகால தனி வாக்கியம் - Past Simple Tense)

(ஆ) He does not go to the market everyday.
அவன் ஒவ்வொரு நாளும் சந்தைக்குச் செல்வதில்லை.
(நிகழ்கால தனி வாக்கியம் - Present Simple Tense)

(இ) She did not travel alone yesterday.
அவள் நேற்று தனியாகப் பயணிக்கவில்லை.
(இறந்தகால தனி வாக்கியம் - Past Simple Tense)

(ஈ) She does not travel alone at all.
அவள் ஒருபொழுதும் தனியாகப் பயணிப்பதில்லை.
(நிகழ்கால தனி வாக்கியம் - Present Simple Tense)

(உ) It did not drink coffee last night.
அது கடந்த இரவு கோப்பி குடிக்கவில்லை.
(இறந்தகால தனி வாக்கியம் - Past Simple Tense)

(ஊ) It does not drink coffee at all.
அது ஒருபொழுதும் கோப்பி குடிப்பதில்லை.
(நிகழ்கால தனி வாக்கியம் - Present Simple Tense)

* மேலும் சில வாக்கியங்கள் இதோ;

(அ) Ragunath did not go to office yesterday.
ரகுநாத் நேற்று அலுவலகத்துக்குப் போகவில்லை.
(இறந்தகால தனி வாக்கியம் - Past Simple Tense)

(ஆ) Ragunath does not go to office everyday.
ரகுநாத் ஒவ்வொரு நாளும் அலுவலகத்துக்குப் போவதில்லை.
(நிகழ்கால தனி வாக்கியம் - Present Simple Tense)

(இ) Ranjini did not travel alone yesterday.
ரஞ்ஜினி நேற்று தனியாகப் பயணிக்கவில்லை.
(இறந்தகால தனி வாக்கியம் - Past Simple Tense)

(ஈ) Ranjini does not travel alone at all.
ரஞ்ஜினி ஒருபொழுதும் தனியாகப் பயணிப்பதில்லை.
(நிகழ்கால தனி வாக்கியம் -Present Simple Tense)

(உ) This cat did not drink coffee last night.
இந்தப் பூனை கடந்த இரவு கோப்பி குடிக்கவில்லை.
(இறந்தகால தனி வாக்கியம் - Past Simple Tense)

(ஊ) This cat does not drink coffee at all.
இந்தப் பூனை ஒருபொழுதும் கோப்பி குடிப்பதில்லை.
(நிகழ்கால தனி வாக்கியம் -Present Simple Tense)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Apple நிறுவனத்தின் புதிய அறிமுகம் ipad



உலகப் புகழ் 'Apple' கணினி நிறுவனம் தமது ipad கணினியை ஏப்ரல் 3 ஆம் திகதி சந்தைப்படுத்தியுள்ளது.

"ipad ஆனது மிகவும் விரைந்து



ஆகியவற்றை விரைந்து உங்கள் விரல் நுனிக்குக் கொண்டு வந்து விடமுடியும்.

கணினி, இணைய விடயங்களைத் தொடுகையின் மூலம் சாதிக்க முடிந்துள்ளமை. மாபெரும் மாற்றம் என்றே உலகம் பூராவும் அநேகரின்

## தொடுகைத் திரையில் உலகமே நம்வசம்



செயற்படக்கூடியது. அதிநவீன தொழில்நுட்பத்தைக் கொண்டே அது தயாரிக்கப்பட்டுள்ளது" என்று Apple நிறுவனத்தின் சிரேஷ்ட அதிகாரியான ஸ்டீவ் ஜொப்ஸ் தெரிவிக்கின்றார். ipad பற்றி கடந்த ஜனவரி மாதம்தான் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. ஸ்டீவ் ஜொப்ஸ்தான் அந்த அறிமுகத்தை செய்திருந்தார்.

தொடுகைத் திரை (Touch Screen) வசதியுடன் அமைக்கப்பட்டுள்ள மேற்படி ipad கணினியானது அளவில் மிகவும் சிறியதாகும். இதில் மிக இலகுவாக இணையத்துடனான செயற்பாட்டை மேற்கொள்ளமுடியும். இணையத்தின் வழியே திரைப்படங்கள், செய்திகள், நூல்கள் கருத்தாக உள்ளது. Apple நிறுவனமானது இதேபோன்றதொரு நவீன தொழில்நுட்ப தயாரிப்பான 'ஐ.ஃபோன்' 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தியிருந்தது. அதற்கு அடுத்ததாகவே இன்னுமொரு படி முன்னேறி ipad ஐ தற்போது அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த ipad ஆனது முதல் கட்டமாக கெனடா, ஜேர்மனி, சுவிட்ஸர்லாந்து, பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

## தெரிந்து கொள்வோம்

- ★ நள்ளிரவில் சூரியன் உதயமாகும் நாடு எது? -நோர்வே
- ★ தபால் முத்திரை பாவனை முறை எந்த நாட்டில் ஆரம்பமாகியது? -பிரிட்டன்
- ★ உலகில் மிகப்பெரிய தீவாக கருதப்படுவது எது? -கிறீன்லாந்து
- ★ 1994 தொடக்கம் 1999 வரை தெ.ஆபிரிக்காவின் ஜனாதிபதியாக இருந்த நெல்சன் மண்டேலா சமாதானத்திற்கான 'நொபெல்' பரிசை எந்த வருடத்தில் பெற்றார்? -1993
- ★ ஒலிம்பிக் தீபத்தின் உயரம் என்ன? -72 செ.மீற்றர்
- ★ ஒலிம்பிக் தீபத்தின் எடை என்ன? -985 கிராம்
- ★ றப்பர் உற்பத்தியில் உலகில் முதலாவது இடத்தை வகிக்கும் நாடு எது? -மலேசியா
- ★ 2009 ஆம் ஆண்டு கடலுக்கடியில் நாடாளுமன்ற அமர்வுகளை நடத்திய ஜனாதிபதி யார்? -மாலைதீவு ஜனாதிபதி மொஹமட் நஷீட்




## அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

# சிங்கப்பூரில் சுவிங்கம் பாவனைத்தடை நீடிப்பு



கடந்த 18 வருடங்களாக சிங்கப்பூரில் அமுலில் இருந்து வருகின்ற சுவிங்கப் பாவனைத் தடையை மேலும் நீடிப்பதற்கு அந்நாட்டு அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக அறிவித்துள்ளது.

இந்தத் தடைச்சட்டத்தின்படி சுவிங்கம் இறக்குமதி செய்யப்படுவதோ, கடைகளில் விற்பனை செய்யப்படுவதோ சிங்கப்பூரில் தடை செய்யப்பட்டுள்ளது.

இந்நாட்டு மக்களில் அநேகர் சுவிங்கம் பாவித்தபின்னர் அதனை பல இடங்களில் ஒட்டி விடுவதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தனர். குறிப்பாக, மின்சார ரயில் வண்டிகளின் கதவுகளில் அவற்றை ஒட்டி விடுவதால் மூட மறுக்கும் கதவுகளால் மணித்தியாலக் கணக்கில் ரயில் பயணம் தாமதப்படும் சந்தர்ப்பங்களும் ஏற்பட்டிருந்தன. எனவே, இவற்றைக் கருத்திற்கொண்டே சுவிங்கப் பாவனை தடை செய்யப்பட்டது.

எனினும், 2004 ஆம் ஆண்டில் இந்தத் தடையில் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதாவது, பற்களில் கோளாறுகள் உள்ளவர்களுக்கான மருத்துவக்குணம் மிக்க சுவிங்கத்தை பாவிப்பதற்கு மாத்திரம் அந்நாட்டு அரசாங்கம் அனுமதி அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஜேர்மனியில் தொழில்நுட்ப வர்த்தகக் கண்காட்சி



உலகிலேயே மிகப் பிரமாண்டமான தொழில்நுட்ப வர்த்தகக் கண்காட்சியாக கருதப்படுகின்ற CeBit கண்காட்சியானது கடந்த மார்ச் மாதம் ஜேர்மனியில் நடைபெற்றுள்ளது. இந்த கண்காட்சியின்போது மைக்ரோசொஃப்ட் நிறுவனம் அமைத்திருந்த மல்டிமீடியா கூடத்தில் டிஜிட்டல் கற்றல் பிரிவில் மாணவர்களுக்கான விடயதானங்கள் பலவும் இடம்பெற்றிருந்தன. 68 நாடுகள் இணைந்து மேற்கொண்ட இந்த கண்காட்சியில் 4,157 தொழில்நுட்ப நிறுவனங்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## ஆப்கான் ஜனாதிபதி சீனாவுடன் ஒப்பந்தம்



சீனா, ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளுக்கிடையே இரண்டு தரப்பு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பொருளாதாரம், தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கும், மேலும் ஏற்றுமதித் துறையில் மேம்பாட்டைக் காணுமுகமாகவுமே இந்த ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று நாட்களுக்கான உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு சீனாவிற்கு சென்றிருந்த ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீத் கர்ஸாய் சீனா ஜனாதிபதியுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளை அடுத்தே மேற்படி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானின் புனர்நிர்மாணப் பணிகளில் சீனா கொடுக்கின்ற உதவிகளுக்கு தமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிப்பதாக ஆப்கான் ஜனாதிபதி சீன ஜனாதிபதியிடம் தெரிவித்தமையும் குறிப்பிடத்தக்கது.

## அற்லஸ் கேள்வி - 250

**கேள்வி:** Cebit என்ற கண்காட்சி கடந்த மாதம் எந்த நாட்டில் நடைபெற்றது?

**சரியான விடை.......................................**

**உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**அற்லஸ் வழியே**
**உலகைக் காண்போம், கேள்வி - 250,**
**விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.**

**போட்டி இல - 248 இன் சரியான விடை: சீனா**

**பரிசு பெறுவோர்**

ஆர்.தீப்பிக்கா,
46, தபாற் கந்தோர் வீதி, மஸ்கெலியா.

த.மாதங்கி,
66A, 2 ஆம் குறுக்குத் தெரு,
வவுனியா.

எம்.அஃப்னாஸ்,
95, சந்திஸ் றோட், வத்தேகம, திக்வல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20/20 உலகக் கிண்ணத்தில் விளையாட சச்சின் மறுப்பு



'டுவெண்டி டுவெண்டி' உலகக் கிண்ணப் போட்டிகளில் கலந்து கொள்வதில்லை என்று இந்தியாவின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.

2007 ஆம் ஆண்டு நடைபெற்ற 20/20 உலகக் கிண்ணப் போட்டியில் கலந்து கொண்ட இந்திய அணி செம்பியனாகியமையால் அத்தகைய முழுமையான அணியில் தன்னை இணைத்துக்கொண்டு அந்தப் பலத்தை சிதைக்க விரும்பவில்லை என்றும் டெண்டுல்கர் விளக்கமளித்துள்ளார்.

இருப்பினும், இந்தியாவில் நடைபெறுகின்ற ஐ.பி.எல் போட்டிகளில் டெண்டுல்கர் சிறப்பாக துடுப்பெடுத்தாடி வருகின்றமையால், மேற்கிந்திய தீவுகளில் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள 20/20 உலகக் கிண்ணப் போட்டிகளில் கலந்து கொள்ளச் செய்யுமாறு பலரும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இதுகுறித்து கருத்துத் தெரிவிக்கையில், தனது முடிவில் மாற்றம் இல்லை என்று தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.


# சிம்பாப்வே அணிக்கு டெஸ்ட்

மேற்கிந்திய தீவுகளில் போட்டிகளில் கலந்து கொண்ட சிம்பாப்வே கிரிக்கெட் அணிக்கு டெஸ்ட் அந்தஸ்து வழங்கப்படக்கூடிய ஏதுநிலை இருப்பதாக கிரிக்கெட் விமர்சகர்கள் கருதுகின்றனர்.

மேற்கிந்திய தீவுகளுடனான டெஸ்ட் போட்டியிலும் 20/20 போட்டியிலும் வெற்றியீட்டிமையின் அடிப்படையிலேயே சிம்பாப்வே அணிக்கு டெஸ்ட் அந்தஸ்து வழங்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

சிம்பாப்வேயில் நிலவுகின்ற அரசியல் சூழ்நிலையின் காரணமாக தமக்கு மறுக்கப்பட்ட டெஸ்ட் அந்தஸ்தினைப் பெறுவதே சிம்பாப்வே அணியின் பிரதான நோக்கமாகவும் இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி விருது



பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் அஃப்ரிடி, யூனுஸ்கான் ஆகியோருக்கு ஜனாதிபதி விருது வழங்கப்பட்டுள்ளமை குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தனது கவலையை தெரிவித்துள்ளது.

அஃப்ரிடி, யூனுஸ்கான் ஆகிய இரண்டு பேருக்கும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை முறையே அபராதமும் தடையும் விதித்துள்ள நிலையில் அவர்களுக்கு விருது வழங்கியுள்ளமை கேலிக்கிடமாக இருப்பதாக சபை குறிப்பிட்டுள்ளது.

எனினும், அஃப்ரிடியும் யூனுஸ்கானும் தமக்கு விருது கிடைக்கப்பெற்றுள்ளமை குறித்து மகிழ்ச்சி வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்க ஐ.பி.எல்: பாகிஸ்தான் வீரர்கள்

அமெரிக்காவில் நடைபெறவுள்ள 'பிரிமியர் லீக்' கிரிக்கெட் போட்டிகளில் கடந்த வருடம் 20/20 உலகக் கிண்ணப்போட்டிகளில் கிண்ணத்தை வெற்றி கொண்ட பாகிஸ்தான் அணியின் வீரர்கள் அனைவருக்கும் வாய்ப்பு வழங்கப்பட இருப்பதாக தெரியவருகின்றது. பாகிஸ்தான் கிரிக்கெட் சபை உறுப்பினர்களுடன் அமெரிக்க அதிகாரிகள் இதுகுறித்து கலந்துரையாடி வருகின்றனர்.

இதுகுறித்து கருத்துத் தெரிவித்துள்ள அமெரிக்க கிரிக்கெட் துறை அதிகாரிகள், "இந்தியாவில் ஐ.பி.எல் போட்டிகளில் பாகிஸ்தான் வீரர்கள் குறைத்து மதிப்படப்பட்டுள்ள போதிலும் உண்மையில் அவர்கள் சிறந்த வீரர்கள்" என்று தெரிவித்துள்ளது டன் அதன் காரணமாகவே அவர்களுக்கு அமெரிக்க ஐ.பி.எல் இல் கலந்து கொள்வதற்கு முழுமையான வாய்ப்பு வழங்கப்படவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர். இதுகுறித்து பாகிஸ்தான் வீரர்களில் அநேகர் தமது விருப்பத்தையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துள்ளனர்.

# அஃப்ரிடி தலைவர்



மேற்கிந்திய தீவுகளில் நடைபெறவுள்ள 20/20 உலகக் கிண்ணப்போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள பாகிஸ்தான் அணியின் தலைவராக அஃப்ரிடி நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே 20/20 அணியின் தலைவராக இருந்த யூனுஸ்கான் அப்போட்டிகளிலிருந்து விலகியதையடுத்து, அணியின் தலைவராக அஃப்ரிடி நியமிக்கப்பட்டிருந்தார்.

எனினும், அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற போட்டியொன்றில் பந்து வீசிய அஃப்ரிடி பந்தை கடித்துச் சேதப்படுத்தியதாக குற்றஞ்சாட்டப்பட்டதை அடுத்து அதுகுறித்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் மூலம் குற்றம் நிருபனமாகியமையால் இரண்டு 20/20 போட்டிகளில் விளையாட முடியாதவாறு அஃப்ரிடிக்கு தடைவிதிக்கப்பட்டது. அவ்வாறே, பாகிஸ்தான் கிரிக்கெட் சபையும் அஃப்ரிடிக்கு அபராதம் விதித்தது. இருப்பினும், மாற்றுவழிகள் இல்லாத நிலையிலேயே அவருக்கே தலைமைப் பதவி மீண்டும் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# மெரதனில் கார்ட்டூன்



ஜப்பானில் டோக்கியோ நகரில் அண்மையில் மெரதன் போட்டிகள் நடைபெற்றன. இப்போட்டிகளில் ஆடவர், மகளிர் என்று ஏராளமானோர் கலந்து கொண்டபோதிலும் சற்று வித்தியாசமான ஒரு விடயம் பலரையும் கவர்வதாக இருந்தது. அதாவது, அந்த மெரதன் ஓட்டத்தில் ஜப்பானில் புகழ்பெற்ற 'அன்பான்மான்' என்ற கார்ட்டூன் பாத்திரத்தை சித்தரிக்கும் வகையில் ஆடைகளை அணிந்தவாறு ஒருவர் இந்த போட்டியில் கலந்துகொண்டார். இதுவே பலரையும் கவரும் விடயமாக அமைந்துவிட்டது.

# டென்னிஸ் வெற்றி




சேர்பியாவின் நொவெக் ஜொக்கொவிச் தற்போது உலகின் இரண்டாம் நிலை டென்னிஸ் வீரராக கருதப்படுகின்றார். அவர் சில தினங்களுக்கு முன்னர் தனது 17 ஆவது ஒற்றையர் கிண்ணமாகிய 'டுபாய்' கிண்ணத்தையே இவ்வாறு அவர் சுவீகரித்தார். ரஷ்யாவின் மிஹாயில் யுஸ்னிவ் என்பவரைத் தோற்கடித்தே அவர் அக்கிண்ணத்தை சுவீகரித்திருந்தார். கடந்த தடவையும் இந்த கிண்ணத்தை ஜொக்கொவிச்சே சுவீகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மகளிர் டென்னிஸ்



சர்வதேச மகளிர் டென்னிஸ் களத்தில் அதிகமான நட்சத்திரங்கள் இருப்பது ரஷ்யாவிலாகும். அதன்படி அண்மையில் எலிஷா கிளெபானோவாவும் இப்பட்டியலில் இணைந்து கொண்டார். மலேசியா பகிரங்க டென்னிஸ் போட்டியில் வெற்றியீட்டியதன் மூலமே இந்தப் பெருமையை அவர் பெற்றுக்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உலகின் பயங்கரமான, கொடிய உயிரினங்களின் பட்டியலில் டைனோசர்களையும் அடக்கலாம். இவை காலமாற்றத்தால் முற்றாக அழிந்துவிட்டன. எனினும், இவை குறித்த ஆய்வுகளும் கண்டுபிடிப்புகளும் இன்றும் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன.



கண்டெடுக்கப்பட்ட டைனோசர் எச்சங்களுடன் எடம் யேட்ஸ்

# பிரமாண்டத்தின் ரகசியம்

அந்தவகையில், அண்மைய ஆய்வொன்றினூடாக டைனோசர்களின் பிரமாண்டமான உருவத்திற்கான ரகசியம் தெரியவந்துள்ளது. தென் ஆபிரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சி ஒன்றின்போது தண்டெடுக்கப்பட்ட டைனோசர் ஒன்றின் எச்சம் தொடர்பான ஆய்வுகளின்போதே அந்த ரகசியம் வெளியாகியுள்ளது.


கண்டெடுக்கப்பட்ட டைனோசர் எச்சத்தின்படி, அது 10 வயது மதிக்கத்தக்க ஒரு டைனோசரினுடையது என்றும், அதன் முதுகெலும்பு மற்றும் பின்னங்கால்கள் இதுவரை கண்டறியப்படாத மாறுபட்ட தோற்றத்துடன் இருந்துள்ளமையும் அவதானிக்கப்பட்டுள்ளது. ஆகவே, இது புதிய வகை டைனோசர் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இதற்கு 'ஏர்த் க்ளோவ்' (Earth Claw) எனப் பெயரிட்டுள்ளனர்.

அகழ்வாராய்ச்சியில் ஈடுபட்ட நிபுணரான எடம் யேட்ஸ், இந்த ஆய்வு குறித்து கருத்துத் தெரிவிக்கையில்;

''தற்போது கிடைக்கப்பெற்றுள்ள டைனோசரின் எச்சத்திற்கமைய, அதன் பின்னங்கால்கள் பலம் வாய்ந்தவையாக இருந்துள்ளமை தெரியவருகின்றது. அத்துடன், அதன் முதுகெலும்பும் வேறுபட்டுக் காணப்படுகின்றது. இதன்படி, டைனோசர்கள் குறித்து பொதுவான சில புதிய முடிவுகளுக்கு வரக்கூடியதாக இருக்கின்றன'' என்றார்.

மேலும், அவரது கருத்தின்படி; ஆரம்ப காலத்தில் டைனோசர்கள் இரண்டு கால்களால்தான் நடந்து சென்றுள்ளன. அப்போது அவை கங்காருவினைப் போன்று சாதாரண உருவத்தில் இருந்திருக்கும். எனினும், அதன் தாடை பெரியதாக இருந்துள்ளமையினால், அது அதிகளவு உணவுகளை உட்கொண்டுள்ளது. இதனால், காலப்போக்கில் அதன் உடல் எடை அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

எனவே, தனது உடல் எடையை சமநிலைப் படுத்தும்பொருட்டு அது கைகளையும் ஊன்றி நடக்கத் தொடங்கியுள்ளபோதும் உட்கொள்ளும் இரையின் அளவைக் குறைத்தபாடில்லை. இதனால், அவற்றின் உடல் எடையும் அதிகரித்து பிரமாண்டமான உருவத்தைப் பெற்றுவிட்டதோடு, காலப்போக்கில் டைனோசர்கள் 4 கால்களையுடைய மிருகங்களாகவே மாறிவிட்டன. இதுவே, டைனோசர்களின் பிரமாண்ட உருவத்துக்கான பிரதான காரணமாக அமைந்திருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.



ஏர்த் க்ளோவின் எச்சத்துக்கு உரித்துடைய டைனோசர் இனம்

# சூரியன் குறித்து நாஸாவின் ஆய்வுத்திட்டம்

அமெரிக்காவின் நாஸா நிறுவனம் அண்மையில் மிக முக்கியமானதும் பயனுள்ளதுமான இரு விண்வெளி செயற்பாடுகளை வெற்றிகரமாக மேற்கொண்டது. அதில் ஒன்று; விண்ணோட நடவடிக்கையாகும். எண்டீவர் விண்வெளி ஓடமானது ஆறு விண்வெளி வீரர்களுடன் சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி நிலையத்துக்குத் தேவையான கருவிகளை எடுத்துச் சென்றமையே அந்த நடவடிக்கை. அடுத்து; ஆளில்லா விண்கலச் செயற்பாடு. இந்தச் செயற்பாட்டின் கீழ், சூரியனை ஆய்வு செய்வதற்காக சூரியனை நோக்கி 'சூரிய கண்காணிப்பகம்' ஒன்றும் அனுப்பப்பட்டது.





அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவினால் நாஸா நிறுவனம் மற்றும் விண்வெளி ஆய்வு செயற்றிட்டங்கள் என்பவற்றுக்காக புதிய வரவு-செலவுத்திட்டமொன்றுடன், புதிய செயற்றிட்டங்களும் முன்வைக்கப்பட்டதை அடுத்தே இந்த இரு முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. அமெரிக்கா தற்போது மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்து வருகின்றமையால், விண்வெளி முயற்சிகளுக்கும் விண்வெளி நடவடிக்கைகளுக்காகவும் தனியார் துறையினரின் உதவியைப் பெற்றுக்கொள்வதே ஜனாதிபதி ஒபாமாவின் புதிய முயற்சியாக இருக்கின்றது.

## சூரிய கண்காணிப்பகம்

சூரிய கண்காணிப்பகத்தை 'அட்லஸ்-5' எனும் விண்கலம்தான் விண்வெளிக்கு எடுத்துச் சென்றது. அது ஃப்ளோரிடாவில் உள்ள கென்னடி விண்வெளி மத்தியநிலையத்திலிருந்து புறப்பட்டுச் சென்றது. சீரற்ற காலநிலை காரணமாக குறித்த விண்கலம் ஏற்கனவே குறிக்கப்பட்டிருந்த நாளுக்கு இரண்டு நாட்களின் பின்பே புறப்பட்டது. இந்த கண்காணிப்பகத்திற்கு 'நாஸாவின் சூரிய கண்காணிப்பகம்' என்று பெயர் வைத்துள்ளனர். இது எமது சூரியனைப் பற்றி தொடர்ந்து 5 வருடங்களுக்கு ஆய்வுகளை மேற்கொள்ளும். அத்துடன், இந்த கண்காணிப்பகமானது செய்மதி ஒன்றின் உள்ளேயே வைக்கப்பட்டிருக்கின்றது.அந்த செய்மதி 3.2 தொன் நிறையுடையது.



குறித்த செய்மதி தற்போதளவில் பூமியிலிருந்து சுமார் 35,880 கிலோமீற்றர் உயரத்தில் நிலைகொண்டுள்ளது. இந்த செய்மதியில் சூரியன் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளும் கண்காணிப்பகம் உள்ளிட்ட செய்மதி மற்றும் தொலைக்காட்டி என்பனவும் உள்ளடங்கியுள்ளன. சூரியனின் அடையாளங்களையும் சூரியனின் வெப்பம் குறித்தும் இதன்மூலம் ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

## பல்வேறு நோக்கங்கள்

அத்துடன், நாஸா நிறுவனத்தின் அதிகாரிகள் இதனுடன் இணைந்ததாக மற்றுமொரு புதிய விண்வெளி செயற்றிட்டமொன்றையும் ஆரம்பித்துள்ளனர். விண்வெளியின் காலநிலை குறித்து ஆய்வு செய்வதே அதன் நோக்கமாகும்.

தவிர, பிரபஞ்சத்தில் வெப்பக் கதிர்வீச்சுக்களின் மாற்றங்கள் குறித்தும் வெப்ப சக்தி மாற்றமடையும் முறை குறித்தும் இதன்போது முக்கிய கவனம் செலுத்தப்படும். இது குறித்து செய்மதி பெற்றுக்கொள்ளும் தரவுகளை புவிக்கு கொண்டுவரவும் அவர்கள் ஏற்பாடு செய்துள்ளனர்.



சூரிய கண்காணிப்பகம் உள்ளடங்கிய செய்மதி

இதனுடன் விண்வெளியில் ஏற்படும் காலநிலை மாற்றங்கள் மற்றும் சூரியனின் வெப்பக் கதிர்வீச்சுக்கள் மற்றும் காந்தசக்தி என்பன புவியின் மின்சக்தி கட்டமைப்புக்கும் தொடர்பாடல் நடவடிக்கைகளுக்கும் செய்மதி சமிக்ஞை நடவடிக்கைகளுக்கும் எவ்வாறான பாதிப்புக்கள் அல்லது தாக்கங்களை ஏற்படுத்துகின்றன என்பன தொடர்பில் ஆராய்தல், அது குறித்து தரவுகளைச் சேகரித்தல் என்பனவும் இதன்போது மேற்கொள்ளப்படவுள்ளன.


அத்துடன், வளிமண்டலத்தின் உள்ளேயும் வெளியேயும் ஏற்படும் தாக்கங்களினால் நிகழும் மாற்றங்களைக் கண்காணிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், சூரியனின் காந்த வலயத்தின் தாக்கம், காந்த சக்தியை சலனச் சக்தியாக மாற்றும் முறை என்பன தொடர்பாக ஆய்வுகளில் ஈடுபடுவதும் இந்த விண்வெளி ஆய்வு செயற்றிட்டத்தின் முக்கிய நோக்கமாகும் என்றும் அறிய வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## ஆறு வித்தியாசங்களில் √ அடையாளமிடுக

1



## கடிகாரங்கள் காட்டும் சரியான நேரத்தில் கோடிடுக

3



1. A. 8 o'clock B. 1 o'clock
2. A. 5 o'clock B. 9 o'clock
3. A. 2 o'clock B. 3 o'clock
4. A. 6 o'clock B. 12 o'clock




**தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்**

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2010.04.14 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 255**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

## ஆங்கிலத்தில் கொடுக்கப்பட்டுள்ள தரவுகளின்படி விடையளிக்க

MUMMY WILL BUY FOR ROSIE: 5 NEW PANTIES, 4 UNDERSHIRTS, 3 T-SHIRTS, 2 PANTS AND 1 SKIRT. CROSS OUT ALL THE OTHER CLOTHES.

2



## ஒத்த உருடன் இணைக்க

4



## சரியான விடையைத் தெரிவுசெய்து புள்ளிக்கோட்டில் எழுதுக

5

(கோழி/பெபிலோனியர்கள்/இத்தாலி/சீனா/புக்கர்/சிலிக்கன்)

1. திராட்சைப்பழ உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு;
 ..................................................
2. சிறந்த நாவலுக்காக ஆண்டுதோறும் வழங்கப்படும் விருது;
 ..................................................
3. பட்டுத்தொழிலை முதலில் அறிமுகம் செய்த நாடு;
 ..................................................
4. கை வைத்தாலே உருகும் தன்மையுடைய உலோகம்;
 ..................................................
5. முதன்முதலாக நாட்டின் வரைபடத்தை உருவாக்கியவர்கள்;
 ..................................................
6. 23 நொடிகள் மட்டுமே பறக்கும் ஆற்றலுடைய பறவை;
 ..................................................

## அற்லஸ் அறிவுக்கு விருந்து 252 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
ஹனஸ் நியாஸ், தரம் - 4A,
மின்ஹாத் தே.பாட., திக்குவல்லை.

**போட்டி: 02**
எம்.ஜே.எம்.அஃப்னான், தரம் - 1,
அக்/ம.ம.வித்.,
அட்டாளைச்சேனை-11.

**போட்டி: 03**
ஜே.பவிர்தனா, தரம் - 7B,
த.ம.கல்., பண்டாரவளை.

**போட்டி: 04**
ஏ.எம்.எம்.அக்ரம்,
47, பழைய சந்தை வீதி, ஏறாவூர்-03.

**போட்டி: 05**
ஆர்.சசிந்ரன், தரம்-7A,
புனித அந்தோனியார் ஆ.ம.வித்.,
கொழும்பு.

## பாராட்டுப் பெறுவோர்


- ந.வதனி, தரம்-3, அச்சுவேலி.
- எம்.அஸ்லம், மதுரஞ்சேனை, பொத்துவில்-03.
- எஃப்.இல்மா பைஸல், தரம்-3, அல்-ஹஸனியா ம.வித்., மக்கொனை.
- இ.சதுர்ஜன், தரம்-7B, வி.ம.கல்., காரைதீவு-01.
- மோஷிகா தாஸ், நல்லாயன் கல்., மட்டக்களப்பு.
- எஃப்.இஸட் நுஹா, தரம்-7C, கமு/அல்-மஸ்ஹர் பெ.உ.பாட., நிந்தவூர்.
- எம்.ஸம்ரீன், அக்குறனை-07.
- யோ.வித்தியாழினி, தரம்-13கலை, பது/பசறை த.ம.வித்., பசறை.
- அஸ்ரா ஹில்மி, தரம்-7E, ஸாஹிரா தே.பாட., மாவனல்லை.
- வி.வினோஜினி, தரம்-7A, கொ/கணபதி இ..ம.ம.வித்., கொழும்பு-12.

## அறிவுக்கு விருந்து 252 விடைகள்

**போட்டி: 01**

| | | |
|---|---|---|
| 01. snail | 06. pail | 11. hail |
| 02. fail | 07. tail | 12. sailing |
| 03. mail | 08. sail | 13. railing |
| 04. nail | 09. jail | 14. mailbox |
| 05. trail | 10. rail | 15. frail |

**போட்டி: 02**



**போட்டி: 03**
(A) medal (B) goat

**போட்டி: 04**
1. ஆண் குயில்
2. இங்கிலாந்து
3. கால்பந்து
4. பெஞ்சமின் ஃபிராங்க்ளின்

**போட்டி: 05**
1. உலகில் முதன்முதலில் சீமெந்து பயன்படுத்தியவர்கள் எகிப்தியர்கள் ஆவர்.
2. ஒட்டகம் சுமார் 300 கிலோ எடையை சுமந்து செல்லக்கூடியது.
3. தொலைபேசி அறிமுகமான பிறகு முதன்முதலில் தொலைபேசியில் பேசியவர் விக்டோரியா மகாராணி ஆவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொலைக்காட்சியின் தந்தை

ஒலி-ஒளிக் காட்சியான தொலைக்காட்சி ஓர் அறிவியல் இமாலய சாதனை எனலாம். தொலைக்காட்சியை உலகுக்குத் தந்தவர் ஜோன் லோகி பெயர்ட். இவர் 1888-1946. ஆம் ஆண்டுக்காலப் பகுதிகளில் வாழ்ந்தார். 1888 ஓகஸ்ட் 13 ஆம் திகதி இங்கிலாந்தில் உள்ள ஹெலன்ஸ் பர்க்கில் பிறந்த இவர் ஒரு கிறிஸ்தவ பாதிரியா[illegible] கடைசி மகனாவார். நல்ல ஆரோக்கியம் இல்லாத குழந்தை யாக இருந்த இவரின் பிற்காலச் சாதனை மிகவும் பெரியது. விளையாட்டு, பொழுதுபோக்கு என எதுவுமே பிடிக்காத இவர் எப்போதும் ஆராய்ச்சிகளி லேயே மூழ்கியிருந்தார்.

தனது 12 ஆவது வயதில் நண்பர்களுடன் சேர்ந்து தனியார் தொலைபேசித் தொடர்பு ஒன்றை ஏற்படுத்தினார். தனது இல்லத்தில் டைனமோவைக் கொண்டு, மின்உற்பத்தி செய்து



மின்விளக்கை எரியவிட்டார். ஹெலன்ஸ்பர்க்கில் இவரது வீட்டில் முதல் மின்விளக்கு எரிந்தது. இவரது நண்பர் ஜேக் புக்காணன் ஒரு நடிகர். அவரு டன் சேர்ந்து புகைப்படக் கலை யிலும் இவர் சில புதுமைகளைச் செய்தார். புகைப்படச் சங்கம் ஒன்றையும் நடத்தினார். ஃபிளேஷ் கெமராவில் மெதுவாக இயங்குவதற்கான வசதியான மாற்றங்களைச் செய்தார். இதன்மூலம் தான் உறங்குவதைத்தானே படம் எடுத்தார். இவையெல்லாம் மிக சிறிய வயதுச் சாதனைகளாகும்.

தனது 17 ஆவது வயதில், க்ளாஸ்கோ , ரோயல் தொழில் நுட்பக் கல்லூரியில் மின் பொறி யியல் கற்கையைக் கற்க இணைந்தார். அக்கல்லூரியில் முதல்நிலையில் கற்றுத் தேறினார். இக்காலத்தில் 'செலினியம்' செல்களைக் கொண்டு, ஒளியை மின் சமிக் ஞையாக மாற்றமுடியும் என நம்பினார். இதுகுறித்து ஆய்வு செய்ய பல்கலைக்கழகத்தில் விதி இல்லாததால், தனது வீட்டில் இந்த ஆய்வுகளைச் செய்தார். எனினும், உடனடி வெற்றி கிடைக்கவில்லை. அத்துடன், மின்சாரத்தின் மூலம் பேசும் படத்தையும் அனுப்ப முடியும் என உறுதியாக நம்பினார்.

அச்சமயத்தில், அந்த ஆய்வுகளுக்கு முதலாம் உலகப்போர் பெரும் தடை யாக இருந்தது. அத்துடன், அவரின் உடல் நலமும் சீரற்று இருந்தது. இருப் பினும், தொலைக்காட்சி ஆய்வில் ஆர்வத்துடன் ஈடுபட்டார். 1924 இல் கம்பியின் மூலம், மூன்று கஜம் தொலைவில் இருந்து சிலுவையின் உருவப்படத்தை ஒளிபரப்பினார். இதனால், லண்டன் தினசரி இவரைப் புகழ்ந்தது. இவர் தனது ஆய்வில் 2000 ஓல்ட் மின்சாரத்தைப் பெற முயன்ற போது விபத்தில் காயப்பட்டார். எனினும், இது இவர் ஆய்வுக்குத் தடையாக இருக்கவில்லை.

எனினும், வறுமை அவரை வாட்டி யது. தனது கருவியின் பாகங்களை விற்று சாப்பிடும் கஷ்டநிலை ஏற்பட்டது. அதிலும் மனம் தளராத அவர் மனித முகத்தை தொலைக்காட்சி யில் காட்டுவதில் 1925 ஒக்டோபர் 2 ஆம் திகதி வெற்றி கண்டார். அது உருவமாகக் காணப்பட்டது. அதன் பின்னர், உண்மையான மனிதனைக் காட்ட ஆசைப்பட்டார். 1926 இல் இவ்வகை ஆய்வில் குறிப்பிடத்தக்க வெற்றி கண்டார். 1928 இல் லண்ட னில் உள்ள தமது பட நிலையத்தில் இருந்த மக்களின் படத்தை, நியூயோர்க் கில் பொருத்தப்பட்ட ரிசீவரில் காட்டி னார். 1929 பார்லிமென்ட் தலையிட்டு தொலைக்காட்சி சேவைக்கு ஆதரவு அளித்தது. 1941 ஆம் ஆண்டில் வண்ணத் தொலைக்காட்சியிலும் சாதனை நிகழ்த்தினார். 1946 ஜூன் 14 ஆம் திகதி இவர் மறைந்தார். வறுமை, நோய் என எத்தனையோ தடையிலும் தொலைக்காட்சி எனும் அற்புதத்தை உலகிற்குத் தந்து, அழியாப் புகழ் பெற்றார்.

# பாலக்னுமா அரண்மனை

இந்தியாவின் ஹைதராபாத்தில் அமைந்துள்ளது பாலக்னுமா அரண்மனை. பாலக்னுமா என்றால் உருது மொழியில் 'சொர்க்கத்தின் நட்சத்திரம்' என்று பொருள்படு கிறது.

19 ஆம் நூற்றாண்டில் ஹைதரா பாத்தின் பிரதம மந்திரியாக இருந்த நவாப் விகார் உல் உல்மாராவால் கட்டப்பட்ட இந்த அரண்மனை இத்தாலிய கட்டடக் கலைஞரால் வடிவமைக்கப்பட்டது. அந்த கட்டடம் ஒரு தேள் வடிவில் உள்ளது. அதன் இருபக்கவாட்டுப் பகுதி களில் கொடுக்குகளைப் போல கட்டடங்கள் அமைந்திருக்கின் றன. 'வால்' பகுதியில் சமைய லறை அமைந்துள்ளது. அந்தக் கட்டடத்தில் அதிகமாகக் கவர்பவை நிஜாம்கள் சேகரித்த விலையுயர்ந்த நகைகள், ஓவியங் கள், சிலைகள் மரப்பொருட்கள், கையெழுத்துப் பிரதிகள், புத்தகங்கள் போன்றவை ஆகும்.



அந்த அரண்மனையில், மிகச் சிறப்பாக உள் அலங்காரம் செய் யப்பட்ட 220 அறைகள்,அலங்கார மேற்கூரைகள், வண்ண ஜன்னல் கண்ணாடிகள், பளிங்குப் படிக்கட் டுகள், அலங்கார நீரூற்றுகள், 138 அலங்கார சரவிளக்குகள், ஒரே நேரத்தில் 100 பேர் சாப்பிடக் கூடிய சாப்பாட்டு மேஜை, தங்கப் பாத்திரங்கள் ஆகியவை பார்வை யாளர்களைக் கவர்கின்றன. அந்தக்கால நிஜாம்களின் ஆடம்பர வாழ்க்கை முறையையும் அவை வெளிக்காட்டுகின்றன.

# வித்தியாசமான விலங்குகள்

உலகில் அழியும் நிலையில் உள்ள சில வித்தியாசமான விலங்குகள் மீது கவனம் செலுத்த முடிவு செய்திருக்கிறது 'லண்டன் விலங்கியல் கழகம்'. இலங்கையில் காணப் படும் மிகவும் ஒல்லியான, சிறிய 'லோரிஸ்' முதல் 'கோபி' பாலைவனப் பகுதியில் காணப்படும் இரட்டைத் திமில் ஒட்டகங்கள் வரை அவற்றில் அடங்கும். அவை போன்ற விலங்குகளைக் காப்பாற்றுவதற்கு என்றே, 'பரிணாம அடிப்படை யில் தனித்தன்மை வாய்ந்த மற்றும் உலக அளவில் அருகிவரும் விலங்குகள் பாதுகாப்புத் திட்டத்தை உருவாக்க இருக்கிறார்கள்.



அழிந்து வரும் வேறு சில விலங்குகள், சனப் புழக்கம் நிறைந்த, சேறும் சகதியுமான சீனாவின் 'யாங்ஸி' நதியில் காணப்படும் டொல்ஃபின், கரீபியத் தீவில் காணப்படும் எலி அளவு விலங்கான சோலேநடான் (நச்சு நிறைந்த எச்சிலை உற்பத்தி செய்யக்கூடிய ஒரு சில பாலூட்டிகளில் ஒன்று), ஆபிரிக்காவின் குட்டி நீர் யானை, உலகிலேயே சிறிய பாலூட்டியான பம்பிள்பீ வெளவால் போன்றவையாகும்.

அத்துடன், எல்லாவற்றிலும் வித்தியாசமானது நியூகி னியில் காணப்படும் நீண்ட மூக்குக் கொண்ட 'எச்சிட்னா' இதன் மூக்கு 30 அங்குல நீளம் வரை இருக்கும். எறும்பு தின்னியைப் போலவே இதுவும் எறும்புகள், கரையான்கள் சிறுபூச்சிகள் ஆகியவற்றை உணவாக உட்கொள்கிறது. எப்படிப்பட்ட கடினமான உணவுப்பொருளையும் இது வாய்க்குள் அரைத்து விடுகிறது. முள்ளம்பன்றி போல இதன் உடம்பு முழுவதும் முட்களாக நிறைந்திருக்கும். புதிதாக ஈனப்பட்ட 'குட்டி எச்சிட்னா' ஒரு கூழாங்கால் அளவில்தான் இருக்கும். பிளாடிபஸ் மற் றொரு விந்தையான விலங்கு. முட்டையிடும் ஒரே பாலூட்டியும் இதுதான் இவ்வகையான வித்தியாசமான விலங்குகள் அருகிவரும் விலங்கின பாதுகாப்புத் திட்டத்தில் அடங்குகின்றன.



# குளவி கொட்டினால்...



தேனீ அல்லது குளவியால் 'கொட்டுப்பட்ட வர்'தான் அது ஏற்படுத்தும் அதீத வலியை விளக்கமுடியும். ஒரு குளவியின்'கொடுக் கில்', கூரிய முனையுடன்கூடிய மூன்று கடினமான முட்கள் உள்ளன. முட்கம்பி வேலியின் கம்பிகளைப் போலவே அவை இருக்கும். குளவியானது கொட்டும்போது தனது உடம்பை வளைத்து, எதிராளியின் உடம்புக் குள் தனது கொடுக்கைச் செலுத்தி விடுகிறது. அப்போது, அது தன் விஷப்பையில் இருந்து கடுகடுப்பை ஏற்படுத்தும் விஷத் திரவத் தையும் பாய்ச்சி விடு கிறது. கூர்மையான கொடுக்கு, கொட்டப்பட்ட விலங்கு அல்லது மனிதரின் உடம்பில் விடுபட்டு விடுகிறது. குளவி அந்தக் கொடுக்கை தன்னுடன் எடுத்துக்கொள்ள முயலும்போது வயிறு கிழிந்து இறக்க நேரிடுகின்றது. தேனீ அல்லது குளவி தன் கொடுக்கில் ஓர் அமிலத்தைக் கொண்டுள்ளன. கொட்டப்பட்டவர் வலியைத் தணித் துக்கொள்ள சோப்பை அந்த இடத் தில் தேய்க்கவேண்டும். அத்துடன், அவைகளின் கொடுக்கில் காரத் தன்மை உள்ளதால் அதைச் சரிப்படுத்த 'வினிகர்' போன்ற அமில வகையை கொட்டிய இடத்தில் தடவவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நடுக்காட்டில் வாழ்ந்தவாறு விலங்குகளை நேசித்தவர்

## விலங்குகளுக்காகவே உயிரைத் துறந்தார்







**ஜோ**ய் எடம்ஸன் அல்லது ஃபெட்ரிக் விக்டோரியா எடம்ஸ் என்பவர் வனவிலங்குகள் தொடர்பாக தேர்ச்சி பெற்ற வல்லுனர் மட்டுமன்றி, அவர் உலகப் புகழ் பெற்ற ஒரு சிறந்த பெண் எழுத்தாளருமாவார். 1910 ஆம் ஆண்டு ஜனவரி 20ஆம் திகதி ஒஸ்ட்ரியாவின் சிலெஸியா நகரில் (தற்போதைய 'செக்' குடியரசு) பிறந்தார்.

பிரிட்டனைச் சேர்ந்த ஜோர்ஜ் என்பவரை திருமணம் முடித்த அவர் கணவருடன் கென்யா நாட்டில் குடியேறினார். வனவிலங்குகள் மீது வைத்திருந்த பாச உணர்வை வெளிப்படுத்தும் விதமாக என்றுமே மறக்கமுடியாத புத்தகமொன்றை எழுதினார். இந்த புத்தகத்தின் மூலமே உலகப் புகழ் பெற்றார். 'போர்ன் ஃப்ரீ' என்ற புத்தகமே அப்புத்தகமாகும். 1960 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட இப்புத்தகமானது உலக நாடுகள் பலவற்றிலும் மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டது.

மேற்படி, புத்தகத்திற்கான கருவானது மிகவும் வித்தியாசமானதாகும். தமது நிஜ வாழ்வை, அனுபவங்களைக் கொண்டே இக்கதையை எழுதியுள்ளார். இக்கதையில் 'எல்ஸா' என்ற சிங்கக்குட்டியே பிரதான கதாபாத்திரமாகும். இந்த 'எல்ஸா' சிங்கமானது அதன் இளம்பராயத்திலேயே எடம்ஸன் தம்பதியருக்கு கிடைக்கப் பெற்றிருந்தது. அதனை வளர்த்தெடுத்து காட்டிற்குள் சேர்க்கும் வரையில் இந்தத் தம்பதியரே கண்ணும் கருத்துமாகப் பாதுகாத்து வந்தனர். இந்த அனுபவம்தான் 'போன் ஃப்ரீ' (Born Free) கதைக்கான மூலக்கருவை உருவாக்கியது. காட்டில் விட்ட பின்னரும் கூட 'எல்ஸா'வை ஜோய் எடம்ஸன் மறக்கவில்லை.எல்ஸா இரண்டு குட்டிகள் ஈன்றதையடுத்து அந்த இரண்டு குட்டிகளையும் அடியிருத்தி இன்னும் இரண்டு நாவல்களையும் வெளியிட்டார் ஜோன் எடம்ஸன். 'லிவிங் ஃப்ரீ', 'ஃபோர் எவர் ஃப்ரீ' ஆகிய பெயர்களிலேயே அந்த நாவல்கள் வெளியிடப்பட்டன.

மொத்தமாக இந்த மூன்று நூல்களையும் தழுவி மூன்று ஆங்கிலத் திரைப் படங்களும் தொலைக்காட்சித் தொடர்களும் தயாரிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இத்திரைப்படங்கள் வனப் பகுதிகளில் ஒளிப்பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், இக்கதையில் வனவிலங்குகள் சம்பந்தமான விஞ்ஞானபூர்வமான தகவல்கள் பலவும் அடங்கியுள்ளமையால் இவை உலகப் புகழ்பெற்றன.

வனப்பகுதிகளை அழிக்காமல் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை மக்களுக்கு அறிவுறுத்தியும் இன்னும் பலவிதமான நூல்களையும் அவர் வெளியிட்டதுடன், மக்கள் மத்தியில் விழிப்புணர்வையும் ஏற்படுத்தினார். இந்தளவிற்கு வனத்தையும் வனவிலங்குகளையும் நேசித்த அவர் அவற்றிற்காகவே தனது உயிரையும் பரிதாபகரமாக தியாகம் செய்யவேண்டியேற்பட்டது.

ஆம்! நடுக்காட்டில் வாழ்ந்து வந்த அவர் வனவிலங்குகளை வேட்டையாடுவோருக்கு எதிராக குரலெழுப்பவும் தவறவில்லை. இதனால், அந்த வேட்டைக்காரர்களின் அச்சுறுத்தலுக்கு ஆளாகியிருந்த எடம்ஸன் 1980 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3 ஆம் திகதி வேட்டைக்காரர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்தார்.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2010,ஏப்ரல் மாதம் 07 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Roatl, Colombo - 02, on Wednesday April 07, 2010.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org